# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 22 சனிக்கிழமை 06.05.2023 கதிர்177


# தமிழ் அரசின் எம்.பிக்களுடன் மே 9 ஜனாதிபதி ரணில் பேச்சு

## வடக்கு எம்.பிக்களுடன் மே 11,12,13 சந்திப்பு

வடக்குமாகாணத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மே 11, 12, 13 ஆகிய மூன்று தினங்களும் பேச்சு நடத்துவதற்கு முன்னதாக மே 9 தமிழ் அரசுக்கட்சியின் (முன்னாள் கூட்டமைப்பு) நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்றுச் சென்று அவருடன் பேசுவதற்கு முன்னதாக, அது குறித்து ஆராய்வதற்குத் தமிழ் அரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். மே 8 தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு வீட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பில் இந்தக் கூட்டத்திலேயே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் மே 11, 12, 13 பேச வருமாறு வடக்கில் உள்ள தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குஜனாதிபதி ☞2

## இது ரகசியம் அல்ல!

அரசியலில் எவ்வளவு அவமானங்கள், தோல்விகள் ஏற்பட்டாலும் அதற்குப் பயந்து ஓடிவிடாமல் மீண்டும் மீண் டும் தமது அரசியல் எழுச்சியை நிலைநாட்டுவவதேராஜபக்சக்களின் தனித்துவம். சந்திரிக்கா குமாரணதுங்க இரண்டு தடவைகள்ஜனாதிபதியாகப் பதவியில் இருந்த பின்னர் அதிகாரத்தைவிட்டுக் கீழிறங்கவேண்டியசூழல்வந்தபோது, தனது தம்பியாரான அனுரவை அந்த இடத்தில் அமர வைப்பதற்கான காய் நகர்த்தல்களில் ஈடுபட்டார். இதற்காகத் தான் ஜனாதிபதியாக இருக்கும்போதே அனுரவைக் கட்சிக்குள் கொண்டுவந்து பிரதமர் பதவியில் அமர்த்தக் காய் நகர்த்தினார் சந்திரிகா. ஆனால், அவரது திட்டத்தைத் தவிடுபொடியாக்கி பிரதமர் பதவியைக் கைப்பற்றிய மகிந்த பின்னர் ஜனாதிபதியாகவும் இரண்டு பதவிக் காலங்களுக்கு அசைக்கமுடியாத அதிகாரத்துடன் பதவியில் இருந்தார். ☞2

## இலங்கைக்கு கடத்தவிருந்த 160 கிலோ கஞ்சா மாட்டியது

### தமிழ்நாடு பொலிஸார் நடவடிக்கை

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் இராமேஸ்வரம் கடற்கரை நோக்கி எடுத்து வரப்பட்டதாகக் கூறப்படும் 160 கிலோ கஞ்சாவை தமிழ்நாடு பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

வெளிமாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குள் இலங்கைக்குக் கடத்துவதற்காக கஞ்சா எடுத்து வரப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமான வாகனம் ஒன்றை மறித்து பொலிஸார் சோதனையிட முயன்றனர். வாகனத்தில் இருந்த அனைவரும் குதித்துத் தப்பி ஓடிவிட்டனர்.

வாகனத்தை சோதனை செய்த சமயம் அதில் மறைத்து வைத்திருந்த 160 கிலோ கஞ்சாவை தமிழ்நாடு பொலிஸார் கைப்பற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கைப்பற்றிய ☞2

## முன்னறிவிப்பின்றி வெளிநாடு பறந்த 50 வைத்தியர்கள் கறுப்புப்பட்டியலில்!

முன்னறிவிப்பின்றி வெளிநாடு சென்ற 50 வைத்தியர்களைக் கறுப்புப்பட்டியலில் சேர்த்துள்ளதாகசுகாதார அமைச்சின்பணிப்பாளர் வைத்தியர் பிரியந்த அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலாங்கொடை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இன்மையால் சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆறு வைத்தியர்கள் கடமையாற்றியிருந்த போதிலும் நேற்றுமுன்தினம் இரண்டு வைத்தியர்கள் மாத்திரமே கடமையாற்றியிருந்தமையால் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் சிரமத்துக் ☞2

## நாடாளுமன்ற பொது நிதி குழு குறித்து சர்வதேச சங்கத்திடம் முறையிட முடிவு

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

நாடாளுமன்றப்பொதுநிதிக்குழுவின் தலைவர் பதவியை நிரந்தரமாக ஒருவருக்கு வழங்காமல், தற்காலிகமாக ஒருவருக்கு வழங்குவது தொடர்பில் சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்திற்கு அறிவிக்கவுள்ளதாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடா நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற பொது நிதிக்குழுவின் கூட்டம் வியாழக்கிழமை (நேற்று முன்தினம்) நடைபெற்றது. இந்தக்கூட்டத்தின்போது, சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாடளுமன்ற நிதிக்குழுவின் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனத்திற்குக் குழுவின் உறுப்பினரான சட்டத்தரணி சந்திம வீரக்கொடி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். எனினும், அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் ஆளும்தரப்பு ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை நியமித்துள்ளது.

நாட்டு மக்களின் பணத்தைக் கையாளும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. மக்களின் நிதியைச் செலவு செய்வது, வரி விதிப்பது தொடர்பான தீர்மானத்தை நாடாளுமன்றமே எடுக்கின்றது.

நிதியைச் சரியாகச் செலவு செய்கின்றார்களா, நாட்டின் இலக்கை அடைதற்குச் செயற்பட்டார்களா என்பதை அறிந்து கொள்வதும் நாடாளுமன்றத்திற்குள்ள பொறுப்பாகும். நாடாளுமன்றத்தில் ☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் திருத்தங்களை பெரமுன முன்வைக்கும்

### சொல்கிறார் அக்கட்சியின் செயலாளர்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் தொடர்பான யோசனைகளை அடுத்த வாரம் நீதியமைச்சரிடம் கையளிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாதச் சட்டத்தின் சில கூறுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த பொது ஜன பெரமுன அது தொடர்பில் என்ன நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது எனத் தெளிவுபடுத்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் பெரும்பாலான விடயங்கள் அரசமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் உறுப்புரைகளுக்கும், ஜனநாயகக் கொள்கைக்கும் எதிரானதாக உள்ளது. ☞2

## ஊழல் குற்றச்சாட்டு உள்ளவர்களே நிதிக் குழுத் தலைவராக நியமனம்

### ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம்

நாடாளுமன்றபொதுநிதிக்குழுவின் தலைமைப்பதவிக்கு ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்களே தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற பொது நிதிக் குழுவின் தலைமைப் பதவிக்கு ஊழல், மோடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பதவிக்கு எதிர்க்கட்சியிலிருந்து வழமையான சம்பிரதாயத்துக்கு அமைவாக ஏன் ஒருவரை நியமிக்க முடியாதுள்ளது? ☞2

## ஹர்ஷவும் காட்டம்

நாடாளுமன்ற பொது நிதிக்குழுவின் தலைவர் பதவிக்கான நிரந்தரமான நியமனம் நான்காவது தடவையாகவும் பிற்போடப்பட்டுள் ளமையானது வெட்கக்கேடான விடயம் என்று கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் தனது டுவிட்டர் பதவிலேயே இந்தக் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்ற பொது நிதிக்குழுவின் தலைவராக கலாநிதி ஹர்ஷ டிசில்வாவே செயற்பட்டிருந்த வேளையிலேயே ஜனவரி 27 அன்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால், தெரிவுக்குழுக்களுக்கான நியமனங்கள் காலவதியாகின.

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தொடங்கியபோது புதிய குழுவுக்கு

## ரணிலின் பிரிட்டன் பயணத்தின் பின் புதிய ஆளுநர்கள் விரைவில் நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டன் விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பிய பின்னர், புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய ஆளுநர்களுக்கு இது தொடர் பான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று அரச உள்ளகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளுநர்களின் தரப்புகளும் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநராக, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க நியமிக்கப்படவுள்ளார் என்று கடந்த நாட்களில் தகவல்கள் வெளியாகின.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், ஆளுநர் பதவிகளைக் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபைகள் கலைக்கப்பட்டதன் பின்னர், அவற்றின் நிர்வாகம் ஆளுநர்களின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்தநிலையில், ஆளுநர் பதவியிலிருந்து விலகுமாறு, ஜனாதிபதி செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர், தன்னைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தெரிவித்தார் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயத்தின் பின்னர், ஆளுநர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதால், தன்னைப் பதவி விலகுமாறு, ஜனாதிபதி செயலகத்தின் குறித்த உயர் அதிகாரி தனக்கு அறிவித்தார் என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும், ஏனைய மாகாண ஆளுநர்களுக்கு ஆளுநர் பதவியிலிருந்து விலகக் கோரும் அறிவித்தல் விடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(02)

## மத்திய வங்கி சட்டமூலம் மீது மே 11 விவாதம்

இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான விவாதம் மே 11 நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றின் அடுத்த அமர்வு மே 9 ஆரம்பமாகவுள்ள நிலையில், மே 10 புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணை மீது சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

இதனையடுத்து மறுதினமான ☞2

## கிழக்கு எம்பிக்களையும் அழையுங்கள் ஜனாதிபதிக்கு செல்வம் எம்.பி. கடிதம்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு முன்னெடுப்பதாக இருந்தால் கிழக்கு தமிழ் உறுப்பினர்களையும் உள்ளீர்த்துக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன். இது தொடர்பாக

அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

''வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் அழைத்து அபிவிருத்தி, அதிகாரப் பகிரர்வு மற்றும் ஏனைய விடயங்களைப் பேசுவதற்கு 11, 12, 13 ஆகிய திகதிகளை ஒதுக்கினீர்கள். ஆனால், வடக்கு, ☞2

## இந்துதுவா கொள்கை அடிமைகளால் ஆபத்துக்குள்ளாகும் வடக்கு, கிழக்கில் பௌத்த மரபுரிமைகளை காக்க மகாநாயக்கர்கள் தலையீடு வேண்டும்

### தேசிய சுதந்திர முன்னணி அழைப்பு

வெடுக்குநாறி மலையில் மீண்டும் ஆதிலிங்கம் வைக்கப்பட்டமையானது பௌத்த மரபுரிமை மீறல் என்று தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தியாவின் இந்துத்துவா கொள்கைக்கு அடிமையானவர்களே பௌத்த மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மகாநாயக்க தேரர்கள் தலையீட்டை வலியுறுத்தப் போவதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர இதனைத் தெரிவித்தார். எதுல்கோட்டேவில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி காரியாலயத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புராதன பௌத்த மரபுரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. இந்தியாவின் இந்துத்துவ வாதக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்களின் ஆலோசனைகளுக்கு அமைய வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் பௌத்த மரபுரிமைகள் அழிப்பு பணிகளை துரிதமாக முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

வவுனியா வெடுக்குநாறி மலையில் பௌத்த மரபுரிமைகளுக்கு முரணான வகையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் மற்றும் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் சுதேச தமிழர்கள் பௌத்த மதத்துக்கு எதிராகச் செயற்படவில்லை. தமிழ் அடிப்படைவாதிகளே இந்தியாவின் இந்துத்துவ வாதக் கொள்கைக்கு அடிபணிந்து இவ்வாறு முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள்.

குறித்த மாகாணங்களில் திட்டமிட்ட வகையில் பௌத்த மரபுரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞2

## மருந்துக் கொள்வனவில் ஆளும் தரப்பு மோசடி

### முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துக் கொள்வனவில் பெரும் ஊழல் மோசடிகள் நடைபெறுகின்றன என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

நுகேகொடவில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியிருந்தும் 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் அதனைத் தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலிலும் மைத்திரி - ரணில் கூட்டால் தோற்கடிக்கப்பட்டார். மிக மோசமான தோல்வி அது. மகிந்த ராஜபக்சக்களுக்கு எதிரான மக்கள் அலை கரைபுரண்டோடியது. ராஜபக்சக்கள் ஊழல், மோசடிக்காரர்கள் என்கிற விம்பம் பெரியளவில் கட்டமைக்கப்பட்டது. அதிகாரம் கைமாறியதும் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்காக ராஜபக்சகுடும்பத்தில் பலரும் சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். ராஜபக்ச குடும்பத்தின் மானம் கப்பலேற்றப்பட்டது.

ஆனாலும் சோர்ந்து விடவில்லை ராஜபக்சக்கள். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றவுடன் கொழும்பில் இருந்து தனது சொந்த இடமான அம்பாந்தோட்டையில் உள்ள மதமுலன என்ற சொந்தக் கிராமத்திற்கே திரும்பிச் சென்றார். அத்தோடு ராஜபக்சக்களின் ஆட்டம் முடிந்தது என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தபோது, 2019 பேரெழுச்சியோடு மீண்டு வந்து ஆட்சியதிகாரத்தைப் பிடித்தார். அதுநிகழ்ந்துமூன்று ஆண்டுகளுக்குள்ளேயே மறுபடியும் ஒரு பெருவீழ்ச்சி. இந்தத் தடவை 2015 கிட்டியதைவிட அடிபலமானது. மகிந்தவின் ஆதரவாளர்களை மக்கள் வீதிகளில் ஓடவிட்டு விளாசினார்கள். சட்டையைக் கிழித்தது உள்ளாடைகளுடன் நையப்புடைத்தார்கள். ராஜபக்ச குடும்பத்தில் ஒருவரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டைவிட்டே தப்பிச் செல்வேண்டிய நிலை ஏற்பட்டது. வரலாற்றில் நவீன துட்டகாமினிகளாகப் பொறிக்கப்பட்டவர்கள்

மக்களின் கைக ளில் அகப்பட்டுச் சின்னாபின்னமாகிவிடக்கூடாது என்கிற அவதியில் படை முகாம்களுக்குள் ஒளித்துக்கொண்டிருக்க வேண்டி ஏற்பட்டது.

ஆட்சி அதிகாரத்தை முற்றிலும் இழந்துஓடவேண்டி ஏற்பட்டது. ராஜபக்சக்களின் அரசியல் சரித்திரம் இத்தோடு முடிந்தது என்று பலரும் நினைத்தனர்.

அந்தச் சம்பவங்கள் எல்லாம் நடந்து இப்போது ஒரு வருடம் முடிவடைந்துவிட்டது. ராஜபக்சக்களின் நிலை மாறிவிட்டது. அவர்கள் இப்போது பொது வெளியில் நம்பிக்கையோடு தோன்றி பழைய மிடுக்குடன் மக்களிடம் பேசுகறார்கள. பொதுக் கூட்டங்கள் போடுகிறார்கள். மகிந்தவை முன்வைத்து

ராஜபக்சகுடும்பம் மீண்டு வந்துள்ளது. மீண்டும் முழு அளவிலான அரசியலுக்குள் புகும் தற்றுணிபை ராஜபக்ச குடும்பம் பெற்றுள்ளது.

நடந்து முடிந்த மே தினப் பொதுக்கூட்டம் இந்த நம்பிக்கையை ராஜபக்சக்களிடம் ஆணித்தரமாக விதைத்துள்ளது. வழமைபோன்ற அல்லாது இந்தத் தடவை பொது ஜன பெரமுன மே தினத்திற்காக பொதுக் கூட்டம் ஒன்றையே ஏற்பாடு செய்திருந்தது. வழக்கமாக பேரணி, பொதுக் கூட்டம் என்று களைகட்டும் கட்சியின் மே தினம். பெரும் எண்ணிக்கையில் மக்களைக் கொழும்பில் திரட்டி தமது பலத்தை நிரூபித்து வந்திருக்கிறார்கள் அவர்கள். இந்தத் தடவை அப்படிப் பேரணிகள் எவையும் ஏற்பாடு செய்யப்படவில்லை. மக்கள் கூட்டம் வரவில்லை என்றால் என்ன செய்வது என்கிற அச்சமே அதற்குக் காரணம். ஆனால், எதிர்பார்ப்புகளுக்கு மாறாக பெரும் எண்ணிக்கையில் பொதுஜன பெரமுனவின் கூட்டத்துக்கு மக்கள் திரண்டனர். இது மகிந்தவுக்குப் புதிய

நம்பிக்கையையும் உத்வேகத்தையும் கொடுத்துள்ளது. ஜோதிடர்களும் மே 7க்குப் பின்னர் மகிந்தவுக்கு மீண்டும் நல்லகாலம் என்று சொல்லியிருப்பதால், இந்த மே தினத்தைப் பார்த்துப் பெரும் உற்சாகம் அடைந்திருக்கிறார் மகிந்த ராஜபக்ச. மீண்டும் நேரடியாக தீவிர அரசியலில் ஈடுபட ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளார்.

இந்த மே தினம் அவருக்கும் கட்சிக்கும் பெரும் நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. இதையடுத்து பொதுஜன பெரமுனவின் அடுத்த வேட்பாளராக, அல்லது பொது வேட்பாளராக ரணில் நியமிக்கப்படுவார் என்கிற பேச்சையெல்லாம் தூக்கிக் கடாசிவிட்டது பெரமுன. இப்போது பெரமுனவின் ஆள்தான் அடுத்த வேட்பாளர், அது பஸிலாகக்கூட இருக்கலாம் என்று கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம் அறிவித்திருக்கிறார்.

அரசியல் சுனாமிகளுக்குள் அகப்பட்டு காணாமல் போய்விடாமல் எதிர்நீச்சல் போடுவதுதான் ராஜபக்சக்களின் பலம். அவர்கள் மீண்டும் இந்த நாட்டின் அரசியலை தங்கள் கைக ளுக்குள் கொண்டு வருவதற்கு இனிமுழுஅளவில் முயற்சிப்பார்கள்.

இடிமின்னல்

## தமிழ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்புவிடுத்துள்ளார். அது தொடர்பான அழைப்புக் கடிதங்கள் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அழைப்பினை ஏற்று அதில் பங்கேற்பதா இல்லையா என்பது தொடர்பில் இன்றையதினம் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் கூட்டான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவுள்ளது.

ரெலோவின் தலைவரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வெள்ளிக்கிழமை இதனை மன்னாரில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தெரிவுக்குழுக்கள் ஊடாகவே அவை இடம் பெறுகின்றன. அதில் பொது நிதிக் குழு முக்கியமானது. ஏனைய நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களைப் போன்று நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த குழுவின் உறுப்பினர்களாவர்.

அவர்களில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் போதிய அறிவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதன் தலைவராக நியமிக்கப்படுவது சம்பிரதாயபூர்வமான விடயமாகும். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் நாடாளுமன்ற சம்பிரதாயத்தினை மீறிச் செயற்பட்டுவருகின்றனர். இதனால் இவ்விடயத்தினை சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளோம் - என்றார்.

## ஊழல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் மோசடிகளால்தான் இந்த நாடு தற்போதைய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நிலையில் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரை நிதிக் குழுவின் தலைவராக நியமிக்கும் இந்த ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் தொடருமாயின் இந்தநாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது? இவ்விதமான நியமனங்கள் மூலம், நாடாளுமன்ற ஜனநாயகம் முற்றாக அழிப்படுகின்றது.

அதேநேரம், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் குறித்த நாடாளுமன்றப் பொது நிதிக்குழுவின் தலைமைப் பதவிக்கு எதிர்க்கட்சியினால் முன்மொழியப்பட்ட கலாநிதி.ஹர்ஷ டிசில்வாவை நியமிக்குமாறு கோரியபோது அதற்கு அவர் இணக்கம் வெளியிட்டிருந்தார். ஆனால் தற்போது அவரது இணக்கத்தினை கடந்து தற்காலிக நியமனமாக ஆளும் தரப்பின் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார் - என்றார்.

## ஹர்ஷவும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவை பொது நிதிக்குழுவின் பதில் தலைவராக நியமித்த ஆளும் தரப்பு, பல நிதிச் சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டது.

இருப்பினும் இதற்கு எதிர்க்கட்சி தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டமையால், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான மயந்த திசாநாயக்கவின் பெயர் ஆளுந்தரப்பால் முன்மொழியப்பட்டு அவருக்குத் தலைமைப் பதவி வழங்கப்பட்டது. இந்தப் பதவியை அவர் கட்சியின் ஆதரவின்றிப் பெபற்றதால் அதனை விட்டு விலகுமாறு கட்சி நிர்ப்பந்தம் கொடுத்தது. சொற்ப நாட்களில் அப்பதவியிலிருந்து விலகுகிறார் என்று அறிவித்தார்.

அதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹர்ஷ டி சில்வாவை குழுவின் தலைவர் பதவிக்கு எதிர்க்கட்சிகள் சார்பில் முன்மொழியப் பட்டிருக்கின்றபோதும் தற்போது வரையில் அவருக்கான நியமனம் வழங்கப்படவில்லை.

## கிழக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கை பிரிக்க முடியாது. வடக்கும், கிழக்கும் எமது தமிழர்களின் தாயகம். எனவே வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி, அதிகாரப் பரவலாக்கம்,

நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் போது இவ்விரு மாகாணங்களையும் ஒன்றிணைத்து நடத்துவதே சிறந்தது என்று நான் கருதுகின்றேன்'' என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

நான் ஒரு கட்சியின் தலைவர், நாடாளுமன்றத்தில் எனது கட்சியைப் பிரதிநித்துவப்படுத்துகிறேன். எனது கட்சி வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் செயற்படுகின்றது. எனவே, அதிகாரப் பகிர்வு மற்றும் பிற விவகாரங்கள் குறித்து ஒரே மேசையில் ஒரு தீர்க்கமான தீர்வு காண பேசுவதே சிறந்தது. அப்படி இல்லை என்று சொன்னால், விவாதிப்பதில் அர்த்தமே இருக்காது. இந்தக் கூட்டத்தில் நான் மட்டும் கலந்துகொள்வதால் தீர்க்கமான எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது என்று உணர்கிறேன். எனவே வடக்கு கிழக்கு பிரச்சினைகளைப் பேசும் போது அனைத்து வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒரே மேசைக்கு அழைத்துபேசுவது நல்லது. இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திலல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருந்துக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் மூன்றுபிரதான பிரச்சினைகள் காணப்படுகின்றன. முதலாவது, நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. அடுத்து நாட்டில் உள்ள மருந்துகளின் தரம் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. மூன்றாவதாக மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துக் கொள்வனவில் பெரும் ஊழல் மோசடிகள் நடைபெறுகின்றன. குறிப்பாக, செபிரக்சின்சோடியம் எனப்படும் உயிர்காக்கும் மருந்தை 25 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கே விலைமனு கோரப்பட்டுள்ளது. எனினும், 19, 36, 34 சத டொலருக்கு மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்களை நாடாது 85 சத டொலருக்கு 25 லட்சம் மருந்துக் குப்பிகளைக் கொள்வனவு செய்தவற்கு இந்த ஆட்சி தீர்மானித்துள்ளது.

அதற்காக அனைத்து ஆவணங்களும் பூர்த்தியாகியுள்ளது. இதனைப் பார்க்கும்போது இந்த ஆட்சி 1.6 மில்லியன் டொலர்கள் விலை மனுவுக்காக மட்டும் செலவழித்துள்ளது - என்றார்.

## பயங்கரவாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே இந்தச் சட்டமூலம் முழுமையாக திருத்தம் செய்யப்படவேண்டும்.

திருத்தமில்லாமல் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எதிராக வாக்களிப்போம் என்று ஜனாதிபதி, நீதியமைச்சர் ஆகியோரிடம் வலியுறுத்தினோம்.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புகள் வெளியாகியுள்ளன. ஆகவே சட்டமூலத்தை மீளாய்வு செய்யக் குழு ஒன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணானது என்பதை நீதியமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். சட்டமூலம் தொடர்பில் பொது மக்கள், அரசியல் தரப்பினரிமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சட்டமூலம் தொடர்பான எமது யோசனைகளை எதிர்வரும் வாரம் நீதியமைச்சரிடம் முன்வைக்கவுள்ளோம் - என்றார்.

## இலங்கைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சாவைக் கடத்தியவர்கள் யார் மற்றும் யாருக்காகக் கடத்தப்பட்டது என்பவை தொடர்பில் தமிழ்நாட்டுப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மத்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே 11 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே 12 வெள்ளிக்கிழமை மு.ப. 9.30மணிமுதல்மாலை 6.00 மணி வரை நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட கவனம் செலுத்தவேண்டும். ஒருதரப்பினரை திருப்பதிப்படுத்துவதற்காக பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளை இந்த ஆட்சி முன்னெடுக்கிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பௌத்த மத உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை மக்கள் அனைவருக்கும் உண்டு. குறித்த மாகாணங்களில் பௌத்தமதமரபுரிமைகளுக்கு எதிரான முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைதடுப்பதற்காக மகாநாயக்க தேரர்கள் தலையிடவேண்டும்என்பதை வலியுறுத்துவதற்காக எதிர்வரும் நாட்களில் மகாநாயக்க தேரர்களை நேரில் சந்திக்கவுள்ளோம் - என்றார்.

## முன்னறிவிப்பின்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளாகியுள்ளனர்.

மறு அறிவிப்பு வரும் வரை மருத்துவமனையில் அவசர அறுவைச் சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படும் என்று மருத்துவமனையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (02)

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22







# இளம் பிக்குகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை அதிகரிப்பு!

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தகவல்

இளம் பிக்குகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை தடுக்குமாறு தேசிய சிறுவர் துஷ்பிரயோக அதிகார சபை வேண்டுகோள்விடுத்துள்ளது.

பௌத்த ஆலயங்களில் இளம் பிக்குகளுக்கு எதிரான தாக்குதல்கள் வன்முறைகள் பாலியல் துஷ்பிரயோகங்கள் வன்முறைகள் அதிகரித்துவருகின்றமை தொடர்பாக சுட்டிக்காட்டியுள்ள தேசிய சிறுவர்பாதுகாப்புஅதிகாரசபை இவ்வாறானசம்பவங்களைத் தடுப்பதற்கு மதகுருமார் நடவடிக்கை எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பௌத்த ஆலயங்களில் இளம் பிக்குகளை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக ஏற்கனவேநடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குற்றவியல் முறைப்பாடுகள் கிடைத்தால் பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய சிறுவர் அதிகாரசபை என்ற அடிப்படையில் சிறுவர்களிற்கு எதிரான வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் உள்ளது எனத் தெரிவித்துள்ள அதிகாரசபையின் தலைவர் பாதிக்கப்பட்டவர் பௌத்தமகுருவா அல்லது சாதாரண நபராக என நாங்கள் பார்ப்பதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டது சிறுவர் என்றால்நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் புசல்லாவையில் 8 வயது பிக்குவை 14-15 வயதுடைய மூன்று பிக்குகள் சித்திரவதை செய்துள்ளனர் அவர்கள் பாலியல் ரீதியில் எந்த குற்றமும் இழைக்கவில்லை,ஆனால் தாக்குதலை மேற்கொண்டு மோசமான சித்திரவதையில் ஈடுபட்டுள்ளனர் இது குற்றவியல் நடவடிக்கை. இந்த குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளோம்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஓட்டோ சாரதிகளை மயக்கிக் கொள்ளை!

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர், ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்தி சாரதிகளின் நகை மற்றும் பணத்தைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

ஒரே நாளில் இரு ஓட்டோச் சாரதிகளிடம் இருந்து நகைகள் மற்றும் பணத்தைக்கொள்ளையடித்துசென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது -

பருத்தித்துறையில் இருந்து வியாழக்கிழமை, ஓட்டோ ஒன்றைவாடகைக்கு அமர்த்திகீரிமலையில்உள்ள காணிகளை பார்க்கவென பெண்ணும், இரண்டு ஆண்களும் கீரிமலை பகுதிக்கு வந்துள்ளனர்.

கீரிமலையில் ஓட்டோச் சாரதிக்கு குளிர்பானத்திற்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அந்த கும்பல், கீரிமலையில் இருந்து பருத்தித்துறை செல்ல பிறிதொரு ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி பருத்தித்துறைக்கு செல்லும் வழியில் குறித்த சாரதிக்கும் குளிர்பானத்திற்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து விட்டு சாரதியிடம் இருந்த பணம்மற்றும்நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை கீரிமலையில்மயக்கமடைந்தஓட்டோச் சாரதி தெல்லிப்பழை வைத்தியசாலையிலும், மற்றையவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# எலிக்காய்ச்சல் பரவுகின்ற வீதமும் அதிகரித்து வருவதாக எச்சரிக்கை!




தற்போது காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியது அத்தியாவசியமாகும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா எஸ்.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள்சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது.

இவ்வாண்டில் இதுவரையில் 30 ஆயிரத்திற்கு அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர்.

எனவே காய்ச்சல் போன்ற நிலைமைகள் ஏற்படும்போது உடனடியாக வைத்தியர்களை நாட வேண்டியது அவசியமாகும்.

இதே வேளை கடந்த ஓரிரு வாரங்களாக கொரோனா தொற்றாளர்களும் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

ஆசிய நாடுகளான இந்தோனேசியா, வியட்நாம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். எனினும் இந்த நிலைமை தொடர்பாக நாம் வீண் அச்சமடையத் தேவையில்லை.

எவ்வாறிருப்பினும் கொரோனாக் காலத்தில் பின்பற்றியசுகாதாரவழிமுறைகளை தொடர்ந்தும் பேணுவதே ஆரோக்கியமானதாகும்.

குறிப்பாக நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருபவர்கள் மற்றும் முதியோர் மிக அவதானமாக செயற்பட வேண்டும்.

இதே போன்று தற்போது எலிக்காய்ச்சல்பரவும்வீதமும் அதிகரித்து வருகிறது.

பற்றீரியாவினூடாகவே எலிக்காய்ச்சல் பரவுகின்றது. விலங்குகளின் சிறுநீரிலிருந்து இந்த பற்றீரியாக்கள் பரவுகின்றன.

வயல் போன்ற பகுதி களிலேயே குறித்த பற்றீரியாக்கள் அதிகளவில் பரவி காணப்படும்.

இதனால் ஏற்படக் கூடிய எலிக்காய்ச்சல்தீவிரமடைந்து மரணம் கூட சம்பவிக்கக் கூடும்.

மார்ச் தொடக்கம் மே மாதம் வரை பெரும்போக நெற்செய்கைக் காலம் என்பதால் விவசாய சமூகத்தினர் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

காய்ச்சல், கண் சிவத்தல், தசை வலி, மஞ்சள் நிறத்தில் சிறுநீர் செல்லல் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் தாமதமின்றி வைத்தியர்களை நாட வேண்டும்.

இந்தநோய் இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களிலேயே அதிகளவில் பதிவாகியுள்ளது.

எவ்வாறிருப்பினும் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள மக்கள் தமது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.' எனத் தெரிவித்துள்ளார்.

# சிறி சபாரத்தினத்தின் 37ஆவது நினைவேந்தல்!

## மட்டக்களப்பில் உணர்வுபூர்வம்



தமிழ் ஈழ விடுதலை இயக்கமானரெலோஅமைப்பின்முன்னாள்தலைவர் சிறி சபாரத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நினைவுநாள் நிகழ்வுகள் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)வின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபாரத்தினத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் பிரதித்தலைவர் இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர், மண்முனை தென் எருவில் பற்று தவிசாளர் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வடக்கு, கிழக்கு பிரிப்பு தந்திரத்துக்கு ஒருபோதும் இடமளிக்கப்படக்கூடாது

**வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வைகாசி மாதம் 11, 12, 13 ஆகிய நாட்களில் அபிவிருத்தி மற்றும் அரசியல் தீர்வு குறித்துப் பேச்சு நடத்துவதற்கு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருக்கிறார். மாசி மாதம் 4, இலங்கையின் விடுதலை தினத்திற்கு முன்னர் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்கிற முழக்கத்துடன் தமிழ்க் கட்சிகளுடன் சில சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் நகலை பிக்குகள் எரித்தமையுடன் அடங்கிப்போன அரசுத் தலைவர் இப்போது மீண்டும் பேச்சு குறித்த தடத்திற்குத் திரும்பியிருக்கிறார். புதிய தந்திரத்துடன்.**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசுத் தலைவருக்கு இந்தியாவின் துணை பெரிதும் தேவையாக இருக்கின்றது. கடந்த காலங்களில் இந்தியா செய்தவைகள் மட்டுமல்ல இனிவரும் காலங்களிலும் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவைவிட்டால் அவருக்கு உடனடி உதவி எதுவும் கிடையாது. எனவே இந்தியா சென்று அது தொடர்பில் விரிவான பேச்சுக்களை நடத்தவேண்டிய தேவை அவருக்கு இருக்கின்றது. ஆனால், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை நடத்திவிட்டு அல்லது அதற்கு நாள் குறித்துவிட்டு இந்தியா வருமாறு புதுடில்லி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டதாகச் சொல்லப்படும் பின்னணியில்தான் ரணில் மீண்டும் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களைத் தொடங்க முற்படுகின்றார்.**

**2015இல் மைத்திரியோடு சேர்ந்த ஆட்சியைக் கைப்பற்றிய பினனர் தீர்வு முயற்சிகளை ரணில் இரண்டு வழிகளில் கையாண்டார். ஒன்று தமிழ் அரசுக் கட்சியுடன் (அப்போதைய கூட்டமைப்பு) நேரடியாகப் பேசுவது. இரண்டாவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவை அமைத்து அதில் தீர்வு குறித்துப்பேசுவது என்ற இரு வழிகளையும் கடைப்பிடித்தார். அதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, தமிழ் அரசுக் கட்சியை அப்போது அவர் தமிழர்களின் பெரும்பான்மைப் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டார். அந்தக் கட்சியின் தயவு அவரது ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையாக இருந்தது என்ற பின்னணியிலும் இதைப் பார்க்கவேண்டும்.**

**இன்று ரணில் அந்த அணுகுமுறையைத் தவிர்க்கிறார். ஆளும் தரப்பில் உள்ள வடக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒருங்கே வைத்து தீர்வு விடயத்தை அணுகப் பார்க்கிறார் அவர். அதையும் வடக்கு கிழக்கு என்று பிரித்துக் கையாள்வதற்கு முயற்சிக்கிறார். இதன் மூலம் தமிழர்களைப் பலவீனப்படுத்த முடியும் என்று கணிக்கிறார். ஆளும் தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் தேசியம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எப்படியும் ஒரு புள்ளியில் சந்திக்கப்போவதில்லை. இதை வைத்தே ரணிலால் காலத்தைக் கடத்திவிட முடியும். வடக்கையும் கிழக்கையும் தனித் தனியே கையாள்வதன் மூலம் இரு தரப்புக்களுக்குள்ளும் இருக்கும் இடைவெளியை மேலும் விரிவாக்கி, கிழக்கை வடக்கிலிருந்து துண்டிக்க முடியும். அதன் பின்னர் கிழக்கில் முஸ்லிம்களுடன் இணைந்து தமிழர்களைக் கையாள்வது அவருக்குச் சுலபம். அதுவும் அங்கு இப்போது பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்கள் பலம்பெற்றுள்ள நிலையில் தமிழர்களைப் பலவீனப்படுத்துவது இன்னும் சுலபம். இவற்றையெல்லாம் கணித்து, கணக்கிட்டு அவர் மேற்கொள்ளும் காய் நகர்த்தல்களை முறியடிப்பது தமிழர்களின் தலையாய தேவை.**

**வடக்கையும் கிழக்கையும் பிரித்து தனித் தனியே கையாள்வதற்கான அனுமதியை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒருபோதும் வழங்கக்கூடாது. அது ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்திற்கும் சாவு மணி அடிப்பதற்கு ஒப்பானது. அதிலும் தீர்வு தொடர்பான எந்தவொரு பேச்சிலும் கிழக்கைத் தனித்துவிட்டு வடக்கு பங்கேற்பதை அனுமதிக்கவே கூடாது. அண்மைக் காலமாகவே ரணில் வடக்கை மட்டும் குறிப்பிட்டே தீர்வு தொடர்பில் பேசி வருகின்றார். அவரது பொறிக்குள் வீழ்ந்து விடாமல் இருப்பது அவசியம்.**

# மஹிந்த குடும்பத்தின் ஊழல்கள் உடன் விசாரிக்கப்படவேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்து



மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல்கள் உடனடியாக விசாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஊழல் பணம் அனைத்தும் மக்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.எம்.எப் பணம் கொடுப்பது சம்பந்தமாக சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அந்த நிபந்தனைகளில் ஊழல்கள் விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் காரணமாகத்தான் இந்த நாடு மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்த ஊழலை விசாரிக்காத பட்சத்தில் நாடு மிகவும் மோசமான சூழலில் அதாவது நாடு பின் தங்கிய நிலையில் தொடர்ந்து செல்லும் வாய்ப்புகள் இருக்கிறது.

ஆகவே, மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் இந்த ஊழல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை கொண்டு வந்து இன்றும் நடமாடிக் கொண்டிருக்கும் அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் கோரிக்கையாக முன் வைக்கின்றோம்.

அப்படி இல்லை என்றால் இங்கு முதலீடு செய்யப்பட்ட வங்கிகளின் பணங்கள் எல்லாம் இந்த கடனுக்காக எடுக்கப்பட்டு மிக மோசமான ஒரு சூழல் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

ஆகவே ஊழலை விசாரிப்பதன் ஊடாகத்தான் இந்த நாட்டிலே முன்னேற்றகரமான செயற்பாடுகளை செய்ய முடியும்.

ஊழல் என்பது கொழும்பில் மட்டுமல்ல, மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தில் மட்டும் அல்ல, கொழும்பிலிருந்து ஒரு சில அதிகாரிகள் ஊடாக வடக்கு கிழக்கிலேயும் நாடு முழுவதும் ஊடுருவியுள்ளது. இவையும் விசாரிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி இனப் பிரச்சினைக்கு இந்தவருடத்துக்குள் தீர்வு என மீண்டும் அறிவிக்க தொடங்கி இருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையில் தீர்வு என்பது எப்படி கிடைக்கும் என்பது கேள்விக்குறியாக தான் இருக்கிறது.

அந்தக் கேள்வியை ஜனாதிபதியிடமே நாங்கள் கேட்கின்றோம்.

வடக்கு கிழக்கிலே தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்ற வேலை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது.

அது புத்தசாசன அமைச்சாக இருக்கலாம், வனவள திணைக்களமாக இருக்கலாம், வனஜீவராசிகள் திணைக்களமாக இருக்கலாம், இப்படி திணைக்களங்களிடம் அதிகாரங்களை கொடுத்துவிட்டு இனப் பிரச்சினைக்கு தீர்வுத் என்பது எப்படி சாத்தியாகும்?

எங்களைப் பொருத்த வரையில் இந்த மண்ணை மீட்பதற்காகத்தான் பல போராளிகள் தங்களுடைய உயிரைக் கொடுத்தார்கள். பொதுமக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தார்கள்.

இப்படி எங்களுடைய பூர்வீக மண் - தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த வடக்கு கிழக்கு மண் - படிப்படியாக தமிழர்கள் பூர்வீகம் இல்லாத ஒரு நிலைமையை இந்த திணைக்களங்களுடன் இணைந்து இந்த அரசாங்கமும் திட்டமிட்டு செய்து வருகின்றது .

இப்படியான ஒரு சூழல் இருக்கும் மட்டும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது எப்படி கிடைக்கும் என்பது கேள்வியாகவே இருக்கின்றது.

ஆகவே வெறும் வார்த்தைகளில் ஜனாதிபதி தீர்வு தீர்வு என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

எங்களுடைய வடக்கு கிழக்கில் இருக்கின்ற மகாவலி வலயம் போன்று காணப்படுகின்ற திணைக்களங்களின் ஆதிக்கத்தை நிறுத்தி தமிழ் மக்களுடைய காணிகளை அவர்களுக்கு ஒப்படைத்து குறிப்பாக இராணுவத்திடம், கடற்படையிடம் இருக்கிற மக்களுடைய காணிகளை ஒப்படைக்க வேண்டும்.

இந்த இக்கட்டான சூழலிலை தவிர்த்து செய்யப்படுகின்ற பேச்சுதான் நல்ல தீர்வை கொடுக்கும் - நல்ல ஒரு சமிஞ்சையாக இருக்கும்.

ஆகவே, இந்த விடயங்களில் கவனம் செலுத்தாது, ஒரு வருடத்திலேயே தீர்வு கிடைக்கும் என்று சொல்வது மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற செயலாகவே இருக்கும்.

மக்கள் நன்றாக நிதானமாக இருக்கிறார்கள். தொடர்ந்து இப்படி சொல்வதை மக்கள் நகைச்சுவையாக தான் பார்ப்பார்களே தவிர நம்பி சிந்திக்க மாட்டார்கள்.

தொடர்ச்சியாக இப்படியான விஷயங்களை பேசுவதை விட்டு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# நுகர்வோர் அதிகார சபை உறுப்பினர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் நால்வர் கைது!

நாரம்மல பிரதேசத்தில் சுற்றிவளைப்புக்கு சென்ற நுகர்வோர் அதிகார சபையின் குருநாகல் மாவட்ட அலுவலக அதிகாரிகள் குழுவை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலுடன் தொடர்புடைய மூவர் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர் எனவும், தாக்குதல் தொடர்பில் கால்நடை பண்ணையின் உரிமையாளர் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாரம்மல பிரதேசத்தில் உள்ள கால்நடை பண்ணை ஒன்றில் பாரிய அளவிலான முட்டை இருப்புகளை தம்வசம் வைத்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து நுகர்வோர் அதிகார சபையின் குருநாகல் மாவட்ட அலுவலக அதிகாரிகள் குழுவொன்று சோதனைக்கு சென்றுள்ளது. இதனைத் தடுக்கும் வகையில் அங்கிருந்த சிலர் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளை தாக்கியதில் 5 அதிகாரிகள் காயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானத்தை சக மனிதர்களிடத்தில் பின்பற்றி நடவுங்கள்

## வெசாக் தின செய்தியில் ஐ.நா. செயலாளர் நாயகம்





உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகிய பண்புகளை பின்பற்றி நடப்பது இன்றியமையாததாகும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்டரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கௌதம புத்தரின் பிறப்பு மற்றும் பரிநிர்வாணமடைதலைக் குறிக்கும் வெசாக் பௌர்ணமி தினத்தை கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்திருக்கும் அவர், இத்தினத்தை கொண்டாடுவதன் நோக்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கிடையிலான புரிந்துணர்வு, நிலையான அமைதி மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் என்பனவே அவையாகும் என்றும் அன்ரோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கௌதம புத்தரின் போதனைகளான சகிப்புத்தன்மை, கருணை, மனிதாபிமானம் ஆகியவற்றைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி அனைவரும் வாழ்வதற்கு ஏற்புடைய அமைதியானதும் சமாதானமானதுமான உலகத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# படைப்புழுக்களின் தாக்கம் அதிகரிப்பு எனக் கவலை

## விவசாயிகள் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணிமுறிப்பு விவசாய பிரதேசத்தில் படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணிமுறிப்பு விவசாய பிரதேசத்தில் படைப்புழுவின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

3000 ஏக்கர்களுக்கு மேல் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பிரதேசத்தில் 400 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களை படைப்புழு தாக்கியுள்ளது.

படைப்புழுவின் தாக்கத்தால் வயலில் காணப்பட்ட நெற்பயிர்கள் சிதைந்து அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

ஒரு பயிரில் பல புழுக்கள் அரித்தவண்ணம் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதனால் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கையை முன்னெடுக்கின்ற ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் விவசாயிகள் இந்த படைப்புழுவை அறக்கொட்டியான் என்ற பெயர் கொண்டே அழைக்கின்றனர்.

இந்த படைப்புழுவின் தாக்கம் மேலும் பல பிரதேசங்களுக்கும் விவசாய நிலங்களுக்கும் பரவி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென விவசாயத் திணைக்களத்தினர் பரிந்துரை செய்துள்ளனர்.

குறிப்பாக அனைத்து விவசாயிகளும் ஒரே சமயத்தில் பீடைநாசினிகளை விசுறுவதன் மூலம் இதனைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடியும் எனவும் இதன் தொடர்பாக அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த விவசாய போதனா ஆசிரியர்களை உடனடியாக தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெறுமாறும் முல்லைத்தீவு பதில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் ஜாமினி சசீலன் தெரிவித்துள்ளார்.

# பலியான கன்றுக்குட்டிக்கு அருகில் கண்ணீருடன் காத்திருந்தது பசு!

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் கன்றுக்குட்டி உயிரிழந்த நிலையில் அதன் தாய் அருகில் கண்ணீருடன் நிற்பது அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு முன்பாக வாகனம் ஒன்று கன்றுக்குட்டியை மோதிவிட்டு சென்றுள்ளது.

இந்த நிலையில் நீண்ட நேரம் உயிருக்கு போராடிய குறித்த கன்றுக்குட்டி உயிரிழந்துள்ளது.

இதன்போது அங்குவந்த அதன் தாயும், சகோதர குட்டியும் கண்ணீர்சிந்திய நிலையில் கன்றுக்குட்டியின் சடலத்திற்கு அருகில் நின்றமை காண்போருக்கு வேதனையை ஏற்படுத்தியிருந்தது.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-19, கடற்கரை வீதி, ஆதன இல 62A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என யாழ் மாநகரசபை அதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை செபஸ்ரி சவரிமுத்து பிரசித்த நொத்தாரிசு யோன் பற்றிக் முகதாவில் 05.09.1967ம் திகதியிட்டு 2803 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அன்ரோனி யோனும் பெண் மரியமுத்துக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை நிரேசம்மா மகள் கவிரியேல் மடுதீன் பிரசித்த தொத்தாரிசு C.C பற்றிக் முகதாவில் 1973 ம் திகதியிட்டு 73 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செபஸ்திப்பிள்ளை. றெஜிஸ்க்குவழங்கியுள்ளார்.

பின்னர் சந்தியாப்பிள்ளை றெஜீஸ் பிரசித்த நொத்தாரிக தீயோ முடியப்பு அந்தோனிப்பிள்ளை முகதாவில் 09.03.1982 ஆம் திகதியிட்டு 280 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் வஸ்தியாம்பிள்ளை பிலிப்பும் பெண் பிலோமினாக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் வஸ்தியாம்பிள்ளை பிலிப்பும் பெண் பிலோமினா பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 20.03.1983 ஆம் திகதியிட்டு 412 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் சந்தியாப்பிள்ளை றேஜிஸ்க்கு வழங்கியுள்ளார்.

பின்னர் செபஸ்தி சந்தியாப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 04.03.1984 ஆம் திகதியிட்டு 528 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் செபஸ்தி மனவல் கைம்பெண் செபமாலையும், மனவல் அல்வீனம்மாவும், மனவல் யசிந்தாவும், மனவல் மக்சி அருள்நேசனும், மனவல் றாஜனி யூலியிற்றும் மற்றும் மனவல் கிப்பெலிற்றாவுக்கு பிரிவிடப்பட்டுள்ளது.

பின்னர் சந்தியாப்பிள்ளை தேவசிகாமணி தனது தத்துவக்காரான இளையவன் கனகரட்ணம் ஊடாகவும். சந்தியாப்பிள்ளை றெஜிஸ் தனது தத்துவக்காரரான இளையவன் கனகரட்ணம் மூலம் பிரசித்த நொத்தாரிசு ரி.கணதீபன் முகதாவில் இல 10.07.2017 ம் திகதியிட்டு 1113 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த பசுபதி குணரெட்ணம் மற்றும் குணரட்ணம் பெண் மொனிக்காவுக்கு வழங்கியுள்ளனர்.

*ஆதன அட்டவணை:*

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை.(தற்போது பாஷையூர் இறை). GS பிரிவு - J/65, யாழ்ப்பாணம். உள்ளூராட்சி சபை - யாழ்ப்பாணம். "கூகை மாவடியும் மறுபிரிவுகளும்".

1. குளி ஒன்பது
2. மேற்படி இறை "கூகை மாவடியும் மறுபிரிவுகளும்" குளி மூன்று தசம் ஒன்பது.

இவ்விரு ஆதனங்களும் தற்போது ஒன்றாக்கப்பட்டு, குறித்த ஆதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்லின் ஞானப்பிரகாசம் இவர்களால் 19.08.2012ம் திகதியில் 1118ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நில அனவைப்படத்தில் துண்டு 2 எனச் சூட்டப்பட்டு, அளந்து கண்டபடி இதன் விஸ்தீரணம் குளிகள் பதினொன்று தசம் ஒன்று நான்கு.

இவ் குளிகள். பதினொன்று தசம் ஒன்று நான்கு இனதும் எல்லைகள்.

கிழக்கு:- வீதி

வடக்கு:- 1115ம் இலக்க நில. அளவைப்படத்தில். துண்டு 1.

மேற்கு:- தேவாசகாயக்தினாலும், ஜன்சன் டோறா அனெற்றினாலும் உரிமை கோரப்படும் ஆதனாங்கள்.

தெற்கு:- குறித்த 1118ம் இலக்க நில அளவைப்பத்தில் துண்டு 3,

இதடாங்கலனைத்தும். தற்போது இவ்வாதனத்தை பசுபதி குணரட்ணம் மற்றும் குணரட்ணம் பெண் மொனிக்கா. தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இல் ஆதனத்திறகு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பசுபதி குணரட்ணம் மற்றும் குணரட்ணம் பெண் மொனிக்கா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

# கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய பெண் கொள்ளையர்கள் சிக்கினர்!

கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய பெண் உட்பட கொள்ளை கும்பல் ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொரளையிலுள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான தங்கப் பொருள்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களை கொள்ளையிட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கும்பலிடமிருந்து சிறியளவிலான போதைப் பொருளும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களிடம் நடத்திய விசாரணையில், திருடப்பட்ட நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி பொரளை கோடீஸ்வர வர்த்தகரின் வீட்டுக்குள் புகுந்த கபர சுரேஷ் என்ற சந்தேக நபர், தங்கப் பொருள்களையும் பணத்தையும் திருடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் பண்டார மற்றும் மதுரங்க ஆகியோருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கிருலப்பனை மற்றும் கொழும்பு பிரதேசங்களில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 42, 46 மற்றும் 53 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வஸ்கடுவ தீ பரவலில் 20 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு சேதம்!

வஸ்கடுவ பகுதியில் மர ஆலை ஒன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை தீ பரவியதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படவிருந்த ஏராளமான பலகைகள் எரிந்து நாசமாகின.

களுத்துறை மாநகரசபையின் தீயணைப்பு பிரிவின் தீயணைப்பு வாகனங்களைப் பயன்படுத்தி தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ அணைப்பு நடவடிக்கைகளின் போது களுத்துறை வடக்கு பொலிஸாரும் பிரதேச மக்களும் உதவினர்.

இந்தச் சம்பவம் காரணமாக 20 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், உயிர் சேதம் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

# உத்தியோகபூர்வ வெளிநாட்டு சொத்து கையிருப்பு அதிகரிப்பு

நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சொத்து கையிருப்பு ஏப்ரல் மாதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சொத்து கையிருப்பு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.2 வீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. ஏப்ரல் இறுதியில் 2.75 பில்லியன் அமெரிக்க டொலர்களை இது எட்டியுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் வெளிநாட்டு நாணய கையிருப்பு 2.69 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

இந்த சொத்து கையிருப்பில் சீன மக்கள் வங்கி பரிவர்த்தனை முறை மூலம் வழங்கிய 1.4 பில்லியன் டொலர்களும் அடங்குவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




காலைக்கதிர்
Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




**1. உரலார் கேள்வி:-**

மே 1 தொழிலாளர் தினத்திற்கான வாழ்த்துச் செய்தி ஒன்றைக் கூறுங்களேன்.

**உலக்கையார் பதில் :-**

உண்மையில் மே 1 தொழிலாளர்களின் தினம் தானா? என்பது பற்றியே எனக்;கு ஐயம் இருக்கிறது. நடக்கும் தொழிலாளர்; தினக் கூட்டங்களைப் பார்;த்;தால் தொழிலாளர்;கள் அரசியலாளர்;களின் கைப்பொம்மைகளாய்த்தான் இன்றும்செயற்படுகிறார்கள் என்பது புரிகிறது. இருக்கும் தொழிற்சங்கங்களை எல்லாம் அரசியல் கட்சிகள் ஆக்கிரமித்து வைத்;திருப்பது வெளிப்படை. இந்நிலையில் மே ஒன்றை தொழிலாளர் தினம் என்று எப்படி ஏற்றுக் கொள்வது? என்றைக்கு தொழிலாளிகள் முதலாளிகளாக மாறுகிறார்களோ அன்றைக்குத்தான் அவர்களுக்குச் சுதந்திரம். அந்த நாளைத்;தான் தொழிலாளர்; தினமாகக் கொண்டாட முடியும் என்பது என் கருத்து.

சல்லடையாரின் சலிப்பு :- ஐயோ பாவம்! அப்ப தொழிலாளர் தினத்தை என்றைக்கும் கொண்டாடவே முடியாதா?

**2. உரலார் கேள்வி:-**

ஹர்த்தாலில் மற்றைய தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு நிற்க, கஜேந்திரகுமார் குழுவினர்கள் இதிலும் இணைய மறுத்துவிட்டார்களே பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில் :-**

“ஊரொடு பகைக்கின் வேரொடு கெடும்!”

**சல்லடையாரின் சலிப்பு :- “ஊரோடு ஒத்தோடு” எண்டதையும் சொல்லலாம் பாருங்கோ.**

**3.உரலார் கேள்வி:-**

இன்றைய மாணவ சமுதாயத்தின் ஒழுக்கம் நாளுக்கு நாள் குறைந்து வருவதைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களா?

**உலக்கையார் பதில் :-**

கவலைப்பட்டு என்ன பயன்? ஒரு காரியத்தை ஒழிக்கவேண்டும்; என்றால் அதன் காரணத்தை முதலில் ஒழிக்கவேண்டும்;. நாங்கள் மாணவர்;களின் ஒழுக்கக் குறைவுக்கான காரணங்களை நாளாந்தம் வளர்த்துவிட்டு, பின்னர் மாணவர்களின் ஒழுக்கம் குறைந்துவிட்டது என்று கவலைப்படுகிறோம். இதைவிட அறிவீனம் என்ன இருக்கமுடியும்?

மேற்கு நாட்டாருக்கு ஒழுக்கம் பற்றிய அடிப்படை மிகக் குறைவு. அவர்கள் வளர்ச்சி என்ற பெயரில் நாளுக்குநாள் பலயீனங்களை வளர்க்கும் கருவிகளைக் கண்டுபிடித்து, இளையோர்; மத்தியில் விநியோகித்தபடி இருக்கிறார்கள். நாமும்; அவையெல்லாம்; நமக்குக் கிடைத்த “வரப்பிரசாதங்கள்” என அவற்றைப் போற்றி மகிழ்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

எந்த வரையறையும் இன்றி நல்லது, கெட்டது என்பவற்றை காட்சிகளாய்க் கண்ணுக்குக் கொண்டு வரும்; கைபேசி ஒன்று போதாதா? நம் இளைஞர்களின் ஒழுக்கத்தைக் கெடுக்க. “நீங்களே அக் கருவிகளுக்குள் நல்லதும் இருப்பதாய்ச் சொல்கிறீர்;களே. அப்படியாயின் கெட்டவற்றை விட்டுவிட்டு நம் இளைஞர்கள் நல்லவற்றை மட்டும் எடுக்கலாமே” என்பீர்கள்.

அது, “நாங்கள் எப்படியும் கவர்ச்சியாய் உடைகள் உடுப்போம். ஆண்கள் ஏன் அதைப் பார்;க்கவேண்டும்? எங்களைக் கண்டிப்பதை விடுத்து அந்த ஆண்களைக் கண்டியுங்கள்” என்று விரச உடைகளுக்காக நியாயம் பேசும் சில புதுமைப்பெண்களின் கருத்திற்கு ஒப்பானதாய்த்தான் இருக்கும்.

இவையெல்லாம் பேசச் சரியாக இருக்குமே தவிர நடைமுறைக்குச் சரியாக இராது. நல்லவையும் கெட்டவையும்; இருந்தால் நல்லவற்றை விட்டுக் கெட்டவற்றை நாடுவது உயிர்;க்குணம்;. அதனால்த்தான் நல்லதான இறையை விட்டு உயிர்கள் மலத்;தை நாடின என்கிறார்கள் தத்துவக்காரர்கள்.

இயற்கை முரண்களை நடைமுறையாய்ப் பேசி நம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதில் அர்த்தமில்லை. ஒருகாலத்தில் நாம் பெற்றோர்க்குப் பயந்தோம். இன்று பெற்றோர்;கள் பிள்ளைகளுக்குப் பயப்படுகிறார்கள். ஒரு காலத்;தில் நாம் உறவுகளுக்குப் பயந்தோம். இன்று உறவுகளைப் பேணாத உலகிற்குள் நம்மைக் கொண்டு வந்துவிட்டார்கள். ஒருகாலத்தில் நாம் ஆசிரியர்களுக்குப் பயந்து நடந்தோம். இன்று மாணவர்களைக் கண்டிக்கும் ஆசிரியர்களை மேற்கு நாட்டாரின் வழிப்படுத்தலின்படி சிறைக்கு அனுப்பச் சட்டம் வந்துவிட்டது. அதனால் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயப்படும்; நிலமை இன்று இருக்கிறது. கண்டிப்பார் எவருமின்றி வளரும் புதிய தலைமுறையிடம் ஒழுக்கம் எப்படி நிலைநிற்கும்?

கட்டிய கயிறுகளை அவிழ்த்;தெறிந்துவிட்டு, ஆடுகள் பயிரை மேய்கின்றன என்று அழுவதில் என்ன பிரியோசனம்.

**சல்லடையாரின்சலிப்பு:- இப்பவெல்லாம் ஆடுகளைத் தோட்டக் காரன் கட்டி வைப்பதில்லையுங்கோ. தோட்டக்காரர்களைத்தான் ஆடுகள் கட்டிவைக்குதுங்கோ.**

**4. உரலார் கேள்வி:-**

தமிழ்நாட்டை விட நம்நாடு எவ்வளவோ மேல் என்று நினைக்கும்படியாக இங்கு ஏதேனும் இருக்கிறதா?

**உலக்கையார் பதில் :-**

ஏன் இல்லாமல்? நிறைய இருக்கிறது. ஒவ்வொன்றாய்ச் சொல்கின்றேன்.

அங்கு இன்றுவரை மாணவர்களுக்குப் பாடசாலைகளில் சமயபாடம் என்று ஒன்று இல்லை. நம்நாட்டில் அது இருப்பதால், மாணவர்களுக்கு அடிப்படை சமய அறிவு பாடசாலைகளிலேயே கிடைத்து விடுகிறது.

அங்கு நம் மொழி உச்சரிப்பைப் பற்றி யாரும் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை. தலைவர்கள் உட்பட பலரும் “தமிழை? தமில்” என்றுதான் சொல்கிறார்கள். “ஊருக்குள் வெள்ளம் புகுந்தது” என்பதை, கொஞ்சம் கூட வெட்கமில்;லாமல் “ஊருக்குள் வெல்லம் புகுந்தது” என்று ஊடகங்களில் செய்தி வெளியிடுகிறார்கள். இந்த விடயத்தில் நம்நாடு தமிழ்நாட்டைவிட எவ்வளவோ உயர்ந்து நிற்கிறது.

இங்குஅரசஆதரவோடுநடத்தப்படும்அறநெறிப்பாடசாலைகள் போல் அங்கு நடத்தப்படுவதில்லை.

ஒழுக்கக்கேட்டின் மூலகாரணமான சினிமா அங்கு நிறைய வளர்ந்துவிட்டது. நல்லகாலமாய் நம்நாடு அந்த விடயத்தில் பின்தங்கித் தப்பிப் பிழைத்திருக்கிறது.

ஆலய வழிபாடுகளில் அனைவர்க்கும் பொதுவாய்க் காட்டப் படும் கட்டுப்பாடுகள் அங்கு இல்லை. அங்குள்ள ஆலயங்களில் செல்வர்கள் முதன்மை பெறுகிறார்கள். நம்நாட்டில் அது மிகமிகக் குறைவு.

அரசியலிலும் சமூகச் செயற்பாடுகளிலிலும் நடிகர்கள் வழிகாட்டும் கொடுமை இங்கு நடப்பதில்லை.

ஒரு புறம் பட்டினியால் விவசாயிகள் செத்துக் கொண்டிருக்க, மற்றொரு புறம் வெறும் சினிமா என்னும் கனவுத் தொழிற்சாலைக்கு கோடான கோடி பணத்தைச் செலவழிக்கும் கொடுமை அங்குதான் இருக்கிறது. அது இங்கில்லை.

ஜாதிகளை வைத்துக் கட்சி நடத்தும் அநியாயம் இதுவரை இங்கு வரவில்லை.

கண்மூடித்தனமாகச் சாமியார்களை பின்பற்றும் கூட்டம் இங்கு மிகக் குறைவு, இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். இந்தக் காரணங்களால்த்தான் எங்களது ஈழத்தை இந்தியாவோடு இணைக்கவேண்டும்; என்ற சிலரின் கருத்தோடு நான் உடன்படுவதில்லை.

**சல்லடையாரின்சலிப்பு:-வாரிதியாருக்குத் தமிழ்நாட்டின் மேல அப்படி என்னதான் கோபமோ?**

**5. உரலார் கேள்வி:-**

நீண்டநாட்களுக்குப்பின்பாக கொழும்பில் நாட்டியவிழா எடுக்கிறீர்களாமே. கம்பன் கழகம் தமிழ்மொழியை வளர்ப்பதை விட்டு விட்டு ஏன் நாட்டியத்தை வளர்க்க நினைக்கிறது?

**உலக்கையார் பதில் :-**

இப்படிப் பலரும் கேட்கிறார்கள். உங்களினூடாக அவர்களுக்கும்; பதில் சொல்ல விரும்புகிறேன். தமிழ்மொழியை நம் ஆன்றோர் இயல், இசை, நாடகம்; என மூன்று கூறுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த மூன்றும் சேர்ந்த முழுமைதான் தமிழ். என்னுடைய ஆசிரியர் வித்துவான் வேலன் அவர்கள், “வெறுமனே இலக்கியங்களைப் படித்துவிட்டு, தமிழ் படித்துவிட்டதாய்ப் பெருமைப்படாதீர்கள். இசை, நாட்டியம் என்பவற்றையும் படித்தால்த்தான் தமிழ் படித்ததாகும்” என்று அடிக்கடி சொல்வார்.

பெரும்பாலும் இங்கு இயற்றுறையினருக்கு இசையும் நாட்டியமும் தெரிவதில்லை. இசைத்துறையினருக்கும் நாட்டியத் துறையினருக்கும் இயற்றுறை அறிவு ஆழமாய் இல்லை. இசைத்துறையும் நாட்டியத்துறையும் தொடர்புடையன ஆதலால் அவ்விரு துறையினரும்; மற்றைய துறை பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால்த்தான் இங்கு முத்தமிழும் பெரிய அளவு வளர்ச்சி பெறாமல் இருக்கிறது.

இந்தக் காரணங்களால்த்தான் கம்பன்கழகம் முத்தமிழ்த்துறை யையும் வளர்க்கும் எண்ணத்தில் இயல், இசை, நாட்டிய விழாக்களை எடுத்து வருகிறது.

**சல்லடையாரின் சலிப்பு :- “இயல் இசை நாடக தீபம் ஏற்றி வைத்தாய் தேவி” சரஸ்வதி சபதத்தில்சிவாஜி பாடிய பாடலை நடைமுறைப்படுத்தினமோ? ஹி..ஹி..**

**6. உரலார் கேள்வி:-**

அண்மைக்காலமாக சிலர் பரதநாட்டியத்தையும் நாட்டுக் கூத்தினையும்; கலந்து நிகழ்ச்சிகள் நடத்த முற்படுகிறார்கள். அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில் :-**

எனக்கு அதில் உடன்பாடில்லை. பரதநாட்டியம் மிக வளர்ச்சி பெற்ற நுண்மையான ஒரு கலை. நாட்டுக்கூத்து அப்படிப்பட்டதல்ல. இசை, நடிப்பு என்ற விடயங்களில் அது மிகப் பின்தங்கி நிற்கிறது. இன்றும் அது பாமரமக்களின் கலையாகவே பயிலப்படுகிறது. நாட்டுக்கூத்தை மண்ணின் கலை என்று சொல்லி, வளர்ச்சியுறச் செய்யாமல் அதனை அப்படியே “உறை நிலையில்” வைத்திருக்கப் பார்க்கிறார்கள் சிலர்.

எனக்குத்; தெரிந்து, பேராசிரியர்; மௌனகுரு அவர்கள், நாட்டுக்கூத்தில் உடையலங்காரம், மேடை அமைப்புப் போன்ற புற விடயங்கள் சிலவற்றில் மட்டும் மாற்றங்கள் செய்ய முயன்று வருகிறார். அக்கலையை உயர் நிலைக்கு வளர்க்க அதுமட்டும் போதாது என்று நினைக்கிறேன். அவரைப் போன்றவர்கள் துணிந்து நாட்டுக்கூத்தின் இசை, பாவம்; போன்ற அக விடயத்திலும் மாற்றங்கள் செய்ய முற்படலாம்.

நாட்டுக்கூத்தின் இசைசெம்மைப்படுத்தப்படவேண்டும். நடிப்பு, குறித்த வட்டத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்படவேண்டும். இல்லாவிட்டால் “கிறைண்டரும் லிக்கியூடைசரும்”வந்துவிட்ட நிலை யில் “நான் எங்கட ஆச்சியின்ர ஆட்டுக்கல்ல அடையாளத்துக்காக அப்படியேதான் வைத்துப் பயன்படுத்துவேன்.” என்று சொல்வது போலத்தான் ஆகிவிடும்.

நிலமை இப்படி இருக்கையில், இவ்விரு கலைகளையும் ஒன்றாக இணைப்பதென்பது முதலாம் வகுப்பு மாணவனையும் பட்டதாரி மாணவனையும் ஒரே வகுப்பில் உட்கார வைக்கும் கதையாகத்தான் இருக்கும். அப்படியும் இப்போது சிலர் செய்ய முயல்கிறார்கள். மங்கள இசையோடு “ஓகன்” போன்ற ஒட்டமுடியாத வாத்தியங்களை இணைத்து இப்போது சிலர் வாசித்து வருகிறார்கள். அதைப் போலத்தான் இதுவும் இருக்கும். புதுமை என்பதற்காக இவற்றைப் பார்க்கலாமே தவிர, ஆழமான ரசனையாளர்களுக்கு அவை வீண் முயற்சிகளாய்த்தான் தெரியும்.

**சல்லடையாரின் சலிப்பு :- உதெல்லாம் கேக்குக்கு சாம்பாறைவிட்டுதின்னுறது போலத்தான்இருக்குமுங்கோ.**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# பழைய குருடி, கதவை திறடி

## அக்க ரை றை அலசல்



என்.சத்தியமூர்த்தி

சென்னை 4 மே 2023

மே தினம் என்றாலே, அரசியல்வாதிகளுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. தொழிலாளர் நலன் குறித்து பேச போகிறோம் என்று பகடி காட்டிவிட்டு, தங்கள் அரசியல் திரிபுகளை அரங்கேற்றுவது வாடிக்கை. காரணம், வருடத்திற்கு ஒரு நாள், அவர்களுக்கு கைதட்ட அவர்களது கட்சிகளை சார்ந்த தொழிலாளர்கள் கச்சைகட்டிக் கொண்டு களம் இறங்குவார்கள். வெட்டிக்கும் வெற்றி கோஷம் எழுப்புவார்கள்.

ஆனால், தொழிலாளர் தினம் என்று கூறிவிட்டு, தங்களது பிரச்னைகள் குறித்து யாருமே பேசுவதில்லையே என்று எந்தவொரு தொழிலாளர் அமைப்பும் கேள்வி எழுப்பியதாக சரித்திரம் இல்லை. அதுவும் இந்த ஆண்டு, சர்வதேச நிதியத்தின் கட்டளைப்படி பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாகக்க அரசு முடிவு செய்வது குறித்து எல்லாம், அரசியல் கட்சிகள் பேசுவார்கள் என்று நினைத்தால், அவர்களை பொறுத்தவரை, பழைய குருடி, கதவை திறடி என்ற கதை தான்.

அந்த வகையில், நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மே தின உரையும் பழைய குருடி வகையே. கடந்த வருடம் மே தினத்தன்று ரணில் ஜனாதிபதியாக இல்லை. தனது ஐக்கிய தேசிய கட்சியின் ஒரே பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே இருந்தார்.

அதனால் தானோ என்னவோ, தான் ஜூலை மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற கையோடு, இனப்பிரச்னைக்கு அடுத்த சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு எட்டப்படும் என்று அறிவித்தார். சுதந்திர தினம் வந்து, போயிற்று. ஆனால், தீர்வு தான் வரவில்லை.

### நித்திய கண்டம்...

இந்த முறை, ஒரு மாறுதலுக்கு, மே தின உரையில், இனப்பிரச்னைக்கு தீர்வு இந்த வருட முடிவிற்குள் எட்டப்பட்டுவிடும் என்று அறிவித்துள்ளார். முடிவு வருகிறதோ, இல்லையோ, இவ்வாறு அறிவித்தாலே போதும் ஆண்டு இறுதிவரை, தமிழர் தரப்புகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு, அரசுக்கு சில மாதங்களுக்காவது தொல்லை கொடுக்க மாட்டாஜுகள் என்று அவருக்கு புரிந்திருக்கிறது.

ரணிலை பொறுத்த வரை, நித்திய கண்டம், பூரண ஆயுசு என்ற அளவிலேயே அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை காலத்தை தள்ளப்பார்க்கிறார். அடைந்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி என்பது தான் அவரது இன்றைய அரசியல் சித்தாந்தம்.

முந்தைய ஜனாதிபதிகளை போல, ரணிலுக்கும் தென்னிலங்கை அரசியல் தான் முக்கியம். ஆனால், தமிழர்களுடனான இனப்பிரச்னை உடனிருந்து கொல்லும் வியாதி. அதற்கு மருந்தும் இல்லை. அதில் இருந்து விடுதலையும் இல்லை.

### சர்வதேச மேற்பார்வை

இப்போது இனப்பிரச்னைக்கு இந்த ஆண்டே தீர்வு என்று கூறியுள்ள ரணில், எதிர்வரும் மாங்களில் மீண்டும் ஜெனிவா ஐநா மனித உரிமை கவுன்சிலுக்கு பதில் சொல்ல வேண்டும். அப்போது, இனப்பிரச்னைக்கான பேச்சுவார்த்தை மீண்டும் துவங்கப்பட்டுள்ளது என்ற கூறி அரசு தப்பித்துக் கொள்வதற்கு ஒரு கருவி வேண்டும். அவ்வளவுதான்.

இனப்பிரச்னை இவ்வாறு என்றால், அதனோடு சேர்ந்த தீவிரவாத தடை சட்டம் குறித்த வரைவை அரசு மக்களவையில் முன் வைத்தது. ஆதற்கு அனைத்து தரப்பினரிடமு; எதிர்ப்பு உள்ளது என்ற காரணத்தால், அதில் சில பகுதிகளை மாற்றி எழுத இருப்பதாகவும் அரசு அறிவித்துள்ளது. இதனையே கூட ஜெளிவாவில் கூறி தப்பித்துக் கொள்ளப்பார்க்கலாம்.

இதுவே அடுத்த ஆண்டு வந்துவிட்டால், ஜனாதிபதி தேர்தல் என்ற கூறி முக்கிய முடிவுகளை அடுத்து தேர்ந்தெடுக்கப்படும் அரசே எடுக்க வேண் டும் என்ற கூட நியாஜும் கற்பிக்க முயலலாம். ஆனால், இந்த ஆண்டு கதை வேறு.

தற்போது, ஐநா மனித உரிமை கவுன்சிலின் 51/1 தீர்மானத்தின் படி, நாட்டின் மனித உரிமைகள் குறித்து அனைத்து வகைகளிலும் விசாரித்து அறியும் உரிமையும் கடமையும் அதன் தலைமைத்துவத் திற்கு உள்ளது. இதற்கு மேல், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உடன்படிக்கையின் கீழ், அன்றாட ஆட்சி குறித்த அனைத்து முடிவுகளையும் அந்த அமைப்பு மேற்பார்வை செய்யலாம் என்று அரசே உரிமை அளித்துள்ளது.

இதன் காரணமாக, இந்த இரண்டு அமைப்புகளும், மத்தளத்தின் இரு பக்கங்களாக, அரசை குறிவைப் பதை நாடு தாங்காது. ஆனால், அதனை ரணில் அரசால் தவிர்க்க முடியாது. இது வரை, பொருளாதார பிரச்னை என்று கருதி வாளாவிருந்த மேற்குலக நாடுகள், தாங்கள் நேரடியாக செய்யாத உதவிகளை காரணம் காட்டி, தங்கள் இஷ்டத்திற்கு அரசை ஆட்டிப்படைக்க முயலும்.

### பழைய மொந்தையில்..

இது ஒரு புறமிருக்க, தமிழ் கட்சிகள் இப்போதே தங்கள் நிலைபாடு என்று பல்வேறு கருத்துக்களை முன் வைத்து வருகின்றன. என்ன, அவை அனைத்துமே, பழைய மொந்தையில் அரத பழசானகள். புழைய மற்றும் தற்போதைய அரச தரப்பினர் போலவே, தமிழர் கட்சிகளும் தாங்கள் முன் வைத்த கோரிக்கைகளை திரும்ப–திரும்ப தூசி தட்டி எடுத்து அது குறித்து அதே பழைய வியாக்கியானங்களை கொடுப்பார்கள்.

துன் பங்கிற்கு, தமிழ் மக்களால் இப்போஹிது மறக்ககடிக்கப்பட்டுள்ள சம்மந்தனும் ஓர் அறிக்கை விட்டுள்ளார். அதனோடு ஒட்டி, யாழ்பாணத்தில் கூடி பேசிய தமிழர் கட்சி தலைவர்கள் பழைய முடிவுகளையே புதிதாக வெளியிடுவார்கள். தங்களில் யார் பெரியவன் என்று அடித்துக் கொள்வார்கள். உள்ளாட்சி தேர்தல் தள்ளி போடப்பட்டதால், வெட்டியாக இருந்த தமிழர் தலைவர்களுக்கு, ரணிலின் அறிவிப்பு, நல்ல பொழுதுபோக்கு.

பெரும்பாலான தமிழ் தலைவர்கள் தற்போது கோரி வருவது எல்லாம், அரசியலமைப்பின் பதிமூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான அதிகார பகிர்வு முறை தான் இதில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டும் தற்போதைய ஒற்றையாட்சி முறையை ஒழித்துவிட்டு அரசியல் பகிர்வு. .அது பதிமூன்றை விட அதிகப்படியாக இருக்க வேண்டும். ரணிலின் அறிவிப்புக்கு பின்னரும் அவர் அதனையே கூறியுள்ளார்.

இதில், பதிமூன்றை தற்போது ஏற்றுக்கொள்ளும் கட்சிகளும் தலைமைகளும், இனப்போர் முடிந்த காலகட்டத்தில், அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவிடம் இதே கோரிக்கையை மட்டும் முன் வைத்திருந்தால், அண்டை நாடான இந்தியா எப்போதோ அந்த தீர்வு திட்டத்தை பெற்று தந்திருக்கலாம்.

ஆனால், அப்போது, தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய மோகம். அதனால் தான், குதிரை, குப்புற தள்ளியது மட்டுமில்லாமல் குழி பறித்தது போன்ற வேலையை செய்தார்கள்.

அதாவது, அதிகார பகிர்வு தாங்கள் கேட்ட வகையில் மட்டுமே இருக்க வேண்டும் என்று இந்தியாவிடம் கோரிக்கையை முன் வைத்துவிட்டு, அமெரிக்கா, ஐநா மனித உரிமை அமைப்பில் முன்னெடுத்த போர் குற்றங்கள் குறித்த தீர்மானத்திற்கும் ஆதரவும் அளித்தனர். இனப்போரில் வெற்றி பெற்ற மஹிந்தா என்றல்ல, அவருடைய இடத்தில் ஜனாதிபதியாக இருந்த எந்தபொரு தென்னிலங்கை தலைவரும் இதனை ஏற்றுக்கொண்டு பதவியில் தொடர்ந்து இருந்திருக்க முடியாது.

### நகைப்பிற்கு இடமானது

எனவே, இந்த உண்மையை நன்றாக அறிந்து உணாந்திருந்த சம்மந்தன் தலைமை அந்த சமயத்தில் முன்வைத்த நிபந்தனைகள் நகைப்பிற்கு இடமானவை. உதாரணத்திற்கு, அரசு, தனது தலைமையிலான கூட்டமைப்புடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதாவது, கூட்டமைப்பு முன் வைக்கும் பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்னர், அரசு தனது பாராளுமன்ற மெஜாரிட்டி மூலம், அதனை சட்டமாக்க வேண்டும். அனைத்துக்கட்சி கூட்டம் மற்றும் பேச்சுவார்த்தைகளுக்கு அங்கு இடமில்லை.

அதே சம்மந்தன் வகையாறா, அடுத்து பதவிக்கு வந்த நல்லாட்சி அரசில் பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் கூறியபடி பாராளுமன்றத்தையே புதிய அரசமைப்பு சபையாக மாற்றி, அதன் மூலம் அனைத்து கட்சி தீர்வு திட்டத்தை ஏற்றுக்கொள்ள தலையாட்டினார்கள். அன்றைய ஆட்சியாளர்களுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண:;டு பங்கு ஆதரவு இல்லை என்பதை தெரிந்து கொண்டே அவ்வாறு செய்தார்கள். ஆனால், பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சா, புதியதொரு அரசியலமைப்பு சபையை நிறுவ முயன்ற போது, அதற்கு இது போன்ற ஆதரவு அளிக்கவில்லை.

தற்போதைய அரசில், அன்றைய பிரதமரான ரணில் தான் ஜனாதிபதி. முன்னர் தமிழர் தரப்பால் நிராகரிக்கப்பட்ட மஹிந்தாவின் ஆசியுடன் தான் இந்த அரசே ஆட்சியில் தொடர்கிறது. என்றாலும், கடந்த ஆண்டு ரணில் அழைப்பின் படி பேச்சுவார்த்தை துவங்குவதற்கு முன்னரே, சுமந்திரன் அவரை திட்டி தீர்த்தார். தற்போது ரணிலின் மே தின அறிக்கைக்கு பின்னர், அதனை மீண்டும் துவங்கி உள்ளார்.

அதாவது, தந்தை செல்வா காலத்தில் துவங்கி, பின்னர் பிரபாகரனாலும் முன்னெடுக்கப்பட்ட உத்தியையே இப்போதும் தமிழர் தலைமை தொடர்கிறது. அதாவது, பேச்சுவார்த்தை, தீர்வு திட்டம் என்றெல்லாம் தொடர்ந்து பேசி, தங்கள் மக்களை மட்டும் தசாம்ச கணக்கில் காயப்போட்டு வருவதை ஒரு கலையாகவே ஆக்கி விட்டார்கள்.

தென்னிலங்கை ஆட்சியாளாகளுக்கு இது என்ன கசக்கவா போகிறது?



# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS













**INCLUSION**

» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

**Travel Date: 19 - 23 May 2023**

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2023 இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 22 வெள்ளிக்கிழமை 05.05.2023 கதிர் 49

## காதலி வெட்டிக்கொலை; காதலன் தப்பியோட்டம்!

தன்னுடைய காதலியை வெட்டிப் படுகொலை செய்து விட்டு பிரதேசத்தில் இருந்து காதலன் தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டி, பல்லேகல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பிலிமத்தலாவைவசிப்பிடமாகக்கொண்ட வருணி நிரோா (வயது 30) என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படிசம்பவம்பல்லேகல பொலிஸ் பிரிவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (02)

# எதிர்ப்புக்கு மத்தியிலும் தையிட்டியில் வெசாக்

### இன்றுடன் முடியும் என அறிவிக்கப்பட்ட போராட்டம் தொடர்கிறது







**தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக மக்கள் மூன்றாவது நாளாகத் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்ற நிலையிலும் விகாரையில் இன்று படையினர் மற்றும் காவல் துறையினரின் முழு ஆதரவுடன் வெசாக் கொண்டாட்டங்கள், பூசைகள் இடம்பெற்றுவருகின்றன. இதையடுத்து இன்று பிற்பகலுடன் முடிவுக்கு வர விருந்த போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.**

2

## வருமுன் காக்கும் பொறிமுறை வேண்டும் ஆக்கிரமிப்பைத் தடுக்க அதுவே வழி

வருமுன்காக்கும்பொறிமுறைகளை தமிழ்த் தரப்பினர் ஒருமித்துக் கையாள வேண்டும் அதுவே ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தடுக்க இதுவே வழி என்று ரெலோவின் பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்தார்.

தையிட்டி விகாரை விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் மீதான நில, மொழி மற்றும் கலாச்சார ரீதியான ஆக்கிரமிப்புகள், அழித்தொழிப்புகளை தடுத்து நிறுத்த முன்னேற்பாடுகளை கொண்ட பொறிமுறைகளை நாம் உருவாக்க வேண்டும். அல்லது இருப்பவற்றை பொறிமுறைகளாக் கையாள வேண்டும்.

நடந்து முடிந்தவைகளுக்காக போராடும் நடைமுறை ஒருபுறம் இருக்க, நடக்கும் முன்னரே தடுத்து நிறுத்தக் கூடிய கட்டமைப்பை தமிழர்கள் உருவாக்கவேண்டும்.

தையிட்டி விகாரை கட்டி எழுப்பப்பட்டுள்ள விவகாரம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். மாகாண சபை ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் இதற்கான அத்திபாரம் இடப்பட்டுள்ளது. தனியார் ஒரு சிலருக்குச் சொந்தமான காணி நிலங்களிலேயே இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது.

ஒரு சில உரிமையாளர்கள் வழக்கு தொடுப்பதற்கு ஆர்வமாக முயற்சி செய்த பொழுதிலும் சரியான தரப்பினரிடம் அவர்கள் செல்லவில்லை. அதேபோன்று அரசியல் தரப்பிலும் வழக்கு தொடுப்பதற்கு முயற்சிசெய்து சில காணி உரிமையாளர்களை சந்தித்த பொழுது அந்த காணி உரிமையாளர்கள் வழக்கு தொடுப்பதில் அக்கறைகொண்டிருக்கவில்லை. வழக்கு தொடுப்பதற்கு அக்கறைகொண்ட தனியார்காணி உரிமையாளரும் அரசியல் தரப்பினரும் ஒருவரை ஒருவர் இறுதிவரை சந்திக்கவில்லை.

அதனால் விகாரை கட்டப்படும் வரைக்கும் தனியாரால் நடவடிக்கை எடுக்க முடியாத அல்லது அரசியல் தரப்பை நாட முடியாத சூழ்நிலையில் இருந்திருப்பது துரதிஷ்டமே. இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஒரு பொறிமுறை மிக அவசியமாகிறது.

மாகாண சபைக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தவேண்டும், ஏற்கனவே அரசமைப்பில் உள்ள அதிகாரங்களை நடைமுறைப் படுத்தி பலமான கட்டமைப்பாக மாற்றவேண்டும் என்ற எமது கோரிக்கையின் பிரதான நோக்கம், அரசியல் தீர்வு எட்டப்படும் வரையில் இப்படியான ஆக்கிரமிப்புகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுதான், அதை எம்மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான பொறிமுறையாக கையாள வேண்டும் என்பதே. அதை ஒருபோதும் அரசியல் தீர்வாக

2

## வெசாக்கை முன்னிட்டு கைதிகள் விடுதலை





வெசாக்தினத்தைமுன்னிட்டு சிறைக் கைதிகளிற்கு மன்னிப்பு வழங்கும் திட்டத்தில் வடக்கு கிழக்கிலும் கைதிகள் இன்று விடுவிக்கப்பட்டனர். சிறு குற்றங்களுக்காகத் தண்டனைபெற்றோர், தண்டப்பணத்தைச் செலுத்த முடியாதமையால் தண்டனை பெற்றோர், நன்னடத்தைகாரணமாகசிறைத் தண்டனை குறைக்கப்பட்டோர் என்றுபலரும்வெசாக்தினத்தில் ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ்விடுவிக்கப்படுவதுவழமை.

**யாழ்ப்பாணம்**

அந்த வகையில் யாழ்ப்பாணம் சிறையில் இருந்து 14பேர் விடுவிக்கப்பட்டனர்.

சிறுகுற்றங்கள் மற்றும் குற்றப.பணம் செலுத்த முடியாமல்தண்டனைபெற்றோரே இனறு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் பி.ஏ.உதயகுமார தலைமையில் இடம்பெற்ற விடுதலை நிகழ்வில் பிரதான சிறைக் காவலர் டி.எச.கேரத் உள்ளிட்டோர் பங்குகொண்டிருந்தனர்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்தும் 14 ஆண் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டு. சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றகைதிகள்விடுவிப்பு நிகழ்வில், பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு இலங்கை முழுவதும் உள்ள சிறைகளில் இருற்கு 988 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

**வவுனியா**

நீதிமன்றஉத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறு குற்றங்களுடன் தொடர்புடையோர், தண்டப் பணம் செலுத்தாதோர், தண்டனைக் காலம் நிறைவடையும் நிலையில் இருந்தோர் என 15 பேர் வவுனியா சிறைச்சாலையில் இருநது விடுதலை செய்யப்பட்டனர்.

சமூகத்தில் நற் பிரஜைகளாக வாழ்வதற்கான அறிவுரைக் கூறி வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார்தலைமையில் சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள்அவர்களுக்கு கைலாகு கொடுத்து விடுவித்தனர்.

## புத்தர்சிலை அடியிலிருந்து ஆண் சிசு உயிருடன் மீட்பு

பிறந்த ஆண் சிசு ஒன்று, புத்தர் சிலைக்கு அடியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தேகம – எல்கடுவ வீதியில் மலியதேவ விஹாரைக்குச் செல்லும் வீதிக்கு அருகில் உள்ள புத்தர் சிலைக்கு அடியில் இருந்து குறித்த சிசு மீட்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த சிசு வத்தேகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

புத்தர் சிலைக்கு அடியில் ஆண் சிசு ஒன்று உயிருடன் காணப்படுவதை அவதானித்தபிரதேசவாசிகள் அதனை எடுத்துச் சென்று வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர் என்று வத்தேகம பொலிஸார் தெரிவித்த்தனர்.

குழந்தை நலமுடன் இருக்கின்றது என்று வத்தேகம வைத்தியசாலையின்பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் குழந்தையைப் பிரசவித்த தாய் குறித்து அறிந்துகொள்ள வத்தேகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## அதிபர் தொலைபேசியைப் பறித்தமையால் உயிர்மாய்க்க முயன்ற வவுனியா மாணவன்

பாடசாலை அதிபர் மாணவன் ஒருவரின் தொலைபேசியைப்பறித்தமையால் குறித்த மாணவன் நஞ்சருந்தி தற்கொலை செய்ய முயன்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் ஒன்று வவுனியா – பூவரசங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இல்ல விளையாட்டுப் போட்டிக்கான இல்ல அலங்காரச் செயற்பாட்டை குறித்த மாணவன் சக மாணவர்களுடன் இணைந்து மேற்கொண்டார்எனவும், அதற்கான ஓவியம் வரைவதற்காக அன்றையதினம் இரவு பாடசாலைக்குத் தொலைபேசியைக் கொண்டு சென்றார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு தொலைபேசியைப்பாடசாலையினுள்குறித்த மாணவன் பாவிப்பதைக் கண்ட அதிபர் தொலைபேசியைப் பறித்ததுடன் மாணவனின் தந்தையைத் தன்னை வந்து சந்திக்க வேண்டும் எனக் கூறினார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அதன்பின்னர் மாணவனின் தாய் அதிபரிடம்

2

## 5 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை!

இலங்கையில் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, காலி, கேகாலை, மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேச செயலாளர் பிரிவுக்கும், காலி மாவட்டத்தின் எல்பிட்டிய மற்றும் நாகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மலையகத்தின் பல பகுதிகளில் மண்மேடு சரிந்துவீழ்ந்துள்ளசம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதன்காரணமாக சில பகுதிகளில்வீதிப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

சாரதிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறுஅறிவுறுத்தப்பட்டுள்ளனர். (02)

## சீனாவின் நிதி உதவியில் வடக்கில் விரைவில் மீனவர்களுக்கு வீடுகள்

### வலைகளும் வழங்கப்படும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(ந.லோகதயாளன்)

வடக்கில் விரைவில் சீனாவின்நிதிஉதவியில்கடற்றொழிலாளர்களுக்குவீடுகள் வழங்கப்பட உள்ளன என்று யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரும் மீன்பிடித்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில்வியாழக்கிழமைஇடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக் கலந்துரையாடலின் நிறைவில் செய்தியாளர்களிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர்மேலும்தெரிவித்ததாவது:

வடமாகாணமக்களுக்காக சீன அரசிடம் இருந்து 1500 மில்லியன் ரூபாய் கிடைக்கப் பெறவுள்ளது. இந்த நிதியில் கடற்றொழிலாளர்களுக்கு வலையும் நிரந்தர வீடுகளும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

இதேபோன்று, ஜப்பான் அரசினாலும் சுமார் 1600 மில்லியன் ரூபாய் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.அதற்கான வேலைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் எமக்கு உதவத் தயாராக இருக்கிறது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க விரைவில் புதுடில்லி செல்ல உள்ளார். அப்போது இந்தியாவும் எமக்கு பல மில்லியன் ரூபாய் உதவித் திட்டங்களை வழங்கும் என எதிர்பார்க்கிறோம் – என்றார் அமைச்சர்.

# பொருள்களின் விலைகள் குறைப்பதன் நன்மை மக்களுக்கு சென்றடைய பொறிமுறை வேண்டும்!

## அசல ஜாகொட தெரிவிப்பு

அரசாங்கம் பொருடள்களின் விலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து-வருகின்றபோதும் அதன் நன்மை மக்களுக்கு செல்வதாகத் தெரியவில்லை.

அதனால் பொருள்களின் விலை குறையும்போது அதன் நன்மை மக்களுக்கு செல்வதை உறுதிப்படுத்த முறையான பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் வியாபாரிகளும் நுகர்வோர் தொடர்பாக சிந்தித்து செயற்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான அசல ஜாகொட தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் ,டம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே ,வ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று ஒரு வருடத்துக்குள் மக்கள் எதிர்நோக்கி வந்த அடிப்படை பிரச்சினைகளுக் கான தீர்வை பெற்றுக்கொடுத்திருக்கிறார்.

குறிப்பாக கடந்த வருடம் ஏப்ரல், மே மாதங் களில் மக்கள் தமிழ், சிங்கள புத்தாண்டைக் கொண்டாடுவதற்கோ, அரசியல் கட்சிகள் மேதின ஊர்வலங்களை நடத்துவதற்கோ நினைத்தும் பார்க்கவில்லை.

அந்தளவுக்கு பொருளாதார பிரச்சினை இருந்து வந்தது.

அதேபோன்று எரிபொருள் கப்பலுக்கான கட்டணத்தை செலுத்த டொலர் இல்லாமல் பல நாள்கள் குறித்த கப்பல் கடலில் தங்கவைக்கப்பட்டிருந்தது.

அதன் காரணமாக பாரியளவில் எரிபொருள் பிரச்சினை ,ருந்து வந்தது. அதனால் மேதின ஊர்வலங்களை நடத்த அரசியல் கட்சிகள் முயற்சிக்கவில்லை. பணவீக்கமும் 94 வீதத்தை தாண்டி ,ருந்தது.

இவ்வாறான நிலையில் ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று ஒரு வருடத்துக்குள் மக்கள் எதிர்நோக்கி வந்த அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டுள்ளார்.

மேதின கூட்டங்களில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியை விமர்சித்தாலும் அவர்கள் மேதின கூட்டத்தை சுதந்திரமாக நடத்து-வதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இது அரசாங்கத்துக்கு கிடைத்த வெற்றியாகும். அதேநேரம் பாரியளவில் அதிகரிக்கப்பட்டிருந்த எரிபொருள்கள் மற்றும் எரிவாயு விலை படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது.கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பாரியளவில் விலை குறைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் எரிபொருள் மற்றும் எரிவாயு விலை அதிகரிக்கப்படிருந்தபோது அதனை காரணம் காட்டி, சேவைகள் மற்றும் பொருள்களின் விலை பாரியளவில் அதிகரிக்கப்பட்டது.

அதபோன்று உணவகங்களில் சாப்பட்டு பொட்களின் விலையும் பாரியளவில் அதிகரிக்கப்பட்டது. ஆனால் தற்போது எரிபொருள் மற்றும் எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ளபோதும் உணவுப்பொருள்களின் விலை இன்னும் குறையவில்லை. இது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை ,ன்னும் தீவிரமாகச் செயற்பட வேண்டும். வியாபாரிகளும் நுகர்வோர் தொடர்பாக சிந்தித்து நியாயமான முறையில் செயற்பட வேண்டும்.

அத்துடன் அரசாங்கம் பொருள்களின் விலையை குறைக்கும் போது அதன் நன்மை மக்களுக்கு சென்றடையும் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும் அதன் நன்மை ஒரு சிலருக்கு மாத்திரமே சென்றடைகிறது. இதனால் மக்கள் அரசாங்கத்துக்கே தொடர்ந்து குறை வரும் நிலை ஏற்படுகிறது.

அதனால் ,து தொடர்பாக விரைவாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு புத்தரின் போதனைகளின்படி அணிதிரள்க!

## வெசாக் வாழ்த்தில் ஜனாதிபதி ரணில்



வளமான ,லங்கையை மீண்டும் கட்டியெழுப்ப புத்தரின் போதனைகளின்படி அனைவரும் ஒத்துழைப்புடனும் ஒற்றுமையுடனும் அணிதிரளுமாறு இந்த புனித நாளில் நான் கேட்டுக்கொள்கிறேன் என வெசாக் பௌர்ணமிதின செய்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெசாக் பௌர்ணமிதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

மூவித ரத்தினங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட வெசாக் பௌர்ணமி தினம் பௌத்த நாட்காட்டியின் மிக முக்கியமான நாள்களில் ஒன்று என்பதோடு இது புனிதத்துவமான முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது.

இந்த நாள் கௌதம புத்தரின் பிறப்பு, புத்தத்தத்துவம் மற்றும் சம்புத்த பரிநிர்வாணத்தின் புனித நிகழ்வை நினைவுபடுத்துவதோடு மனிதநேயம் மற்றும் கருணையுடன் கூடிய அறப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் கௌதம புத்தரின் போதனைகளுக்கு மரியாதை செலுத்துவதற்கான வாய்ப்பாகவும் இருக்கிறது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்து வரும் இந்த சவாலான நேரத்தில், காலத்தால் அழியாத கௌதம புத்தரின் தத்துவம் ஆறுதலுக்கான வழியாக அமைந்துள்ளது.

எனவே, ,க்கட்டானகாலகட்டத்தைக்கடந்து இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதற்கான சவாலை முறியடிக்க, புத்தர் கூறியமை போல் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் ஒன்றிணைவது அவசியம்.

பௌத்த தத்துவத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கருணை (மெட்டா), இரக்கம் (கருணா), சாந்தம் (முதிதா) மற்றும் சகிப்புத்தன்மை (உபேக்கா) ஆகிய நான்கு நற்பண்புகளைப் பின்பற்றி நாம் அந்தப் பாதையில் பயணிக்க வேண்டும்.

வளமான இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப புத்தரின் போதனைகளின்படி அனைவரும் ஒத்துழைப்புடனும் ஒற்றுமையுடனும் அணிதிரளுமாறு இந்த புனித நாளில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வெசாக் அனுஷ்டானங்கள், அறியாமை ,ருளை அகற்றி இலங்கையை மறுமலர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் வரமாக அமையட்டும்! அனைத்து உயிர்களுக்கும் இன்பமான வெசாக் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தினேஸ் சாப்டரின் குடும்ப உறவினர்கள் மடிக்கணினியை ஆராய நீதிமன்று அனுமதி



மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல வர்த்தகர் தினேஸ் சாப்டரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன்தோமஸ் ஆகியோர் பயன்படுத்திய மடிக்கணிணிகளை ஆராய்வதற்கு சிஐடியினருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அரசகுப்பாய்வாளர்திணைக்களத்திற்கு மடிக்கணிணிகளை சமர்ப்பித்து உரிய அறிக்கையை பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தினேஸ்சாப்டரின்குடும்பஉறுப்பினர்களும் பிரையன் தோமசும் பயன்படுத்திய மடிக்கணிணிகளைஆராய்வதற்கானஅனுமதியை சிஐடியினர்நீதிமன்றத்திடம்கோரியிருந்தனர்.

,தனடிப்படையில் கொழும்பு நீதிவான் பிரசன்ன டி அல்விஸ் ,தற்கான அனுமதியை வழங்கியுள்ளார். தினேஸ்சாப்டர் கடந்த வருடம் டிசெம்பர் 15 ஆம் திகதி மர்மமானமுறையில் உயிரிழந்தார்.

# சூடானிலிருந்து இலங்கையர் ஒருவர் உட்பட 1765 பேர் சவூதியைச் சென்றடைந்தனர்!









சூடானில் சிக்குண்டு தவிக்கும் இலங்கையர் ஒருவர் நேற்று (வியாழக்கிழமை) மாலை சவூதி அரேபிய அரசினது ஒத்துழைப்பால் சவூதியின் ஜெத்தா நகரினை சென்றடைந்துள்ளார்.

சவூதி அரேபிய அரசு அதன் தலைமைத்துவத்தினது வழிகாட்டுதலின் கீழ், சூடானில் சிக்கித் தவிக்கும் நட்பு நாட்டுப் பிரஜைகளை வெளியேற்றும் முயற்சியின் தொடர்ச்சியாக, அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட 1765 பேரும் நேற்று மாலை சவூதி அரேபிய கப்பலான 'அமானா' மூலம் ஜெத்தா நகரை வந்தடைந்துள்ளதாக ,லங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் ,லங்கையர் ஒருவரும் உள்ளடங்குகிறார்.

ஏனையவர்கள் எகிப்து, ஈராக், துனிசியா, சிரியா, ஜோர்தான், ஏமன், எரித்திரியா, சோமாலியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், கொமோரோஸ், நைஜீரியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், அசார்பைஜான், மலேசியா, கென்யா, தான்சானியா, அமெரிக்கா, செக், பிரேசில், ,ங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்வீடன், கனடா, கேமரூன், சுவிற்ஸர்லாந்து, டென்மார்க் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர் எனக் கூறப்படுகிறது.

சூடானிலிருந்து ஜெத்தா நகரை சென்றடைந்தவர்கள், தத்தமது நாடுகளுக்கு புறப்படுவதற்குத் தயாராகும் வகையில், தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் சவூதி அரேபியா அதீத ஆர்வம் காட்டி வருவதாகவும் தூதுவர் கூறியுள்ளார்.

சூடான் நாட்டில் நிலவும் போர்ச்சூழலில் சிக்கித்தவிக்கும் ஏனைய நாட்டுப்பிரஜைகளை வெளியேற்றும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சூடானில் ,ருந்து ,துவரை மொத்தமாக 110 நாடுகளைச் சேர்ந்த 7839 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் 247 பேர் சவூதி அரேபியாவையும், 7592 பேர் ஏனைய நாடுகளையும் சேர்ந்தவர்கள் என வெளியாகியுள்ள தகவல்களை தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

## வருமுன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் கோரவில்லை. அரசியல் முதிர்ச்சியற்ற, தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அபாயத்தை உணராத சில தரப்புக்கள் அதை நாங்கள் அரசியல் தீர்வாகக் கோருகிறோம் என்று மக்களைத் தவறாகத் திசை திருப்பி தெரிந்தோ தெரியாமலோ அரசினுடைய நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போயிருக்கிறார்கள்.

இனியாவது நிலைமையைப் புரிந்து கொண்டு நமக்கான பொறிமுறைகளை வகுக்கவும், இருக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி அதைப் பொறிமு-றையாகக் கையாளவும் தமிழ்த் தரப்பு தயாராகவேண்டும்.

ஒவ்வொரு விடயத்திற்கும் விளக்க உரைகளை வழங்குவதும் கட்சி நலன்கள் மற்றும் தேர்தல் நோக்கங்களுக்காக தமிழ் மக்களை தவறாகத் திசை திருப்பி வழிநடத்த முற்படுவதும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு உரம் சேர்க்குமே தவிர தமிழ் மக்களை காப்பதற்கு உதவாது. இனியாவது தமிழ் மக்கள் ஒன்றிணைந்து நம்மைக் காக்கும் பொறிமுறைகளை வகுத்துக்கொள்ளவும் இருப்பவற்றைச் சரியாகக் கையாயவும் முன் வரவேண்டும் எனக் கோரி நிற்கிறோம். அதுவே நிலையான அரசியல் தீர்வு வரும் வரை எமது இனத்தின் இருப்பைத் தக்கவைக்கும் – என்றுள்ளது.

## அதிபர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசியில் விடயத்தைக் கேட்டதுடன் தொலைபேசியை வழங்குமாறும் கோரியுள்ளார். எனினும், அதிபர் தொலைபேசியை வழங்காததுடன், தந்தையைக் கட்டாயம் தன்னை வந்து சந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து தொலைபேசியின் ஊடாக மாணவனின் தந்தை அதிபரைத் தொடர்பு கொண்டு கதைத்துள்ளார்.

இதன்பின்னர், மாணவனின் தந்தை தனக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்று பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் அதிபர் முறைப்பாட்டைப் பதிந்துள்ளார்.

இந்த முறைப்பாட்டையடுத்து இரு தரப்பினரையும் பொலிஸார் அழைத்துப் பேசி விசாரணை நடத்தினர் எனவும் மாணவனின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே அவமானத்தைத் தாங்க முடியாமல் குறித்த மாணவன் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயன்றார் எனவும் மாணவனின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாணவனின் பெற்றோரால் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 12 ஆம் திகதி குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைக்காக அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மனித உரிமை ஆணைக்குழுவால் அழைக்கப்படவுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளரும் விசாரணைகளைமேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

## எதிர்ப்புக்கு ...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட இந்த விகாரையை அகற்றி, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது நிலங்களையும் விகாரையைச் சுற்றியுள்ள தமது காணிகளையும் விடுவிக்கக்கோரி அந்தப் பகுதிப் பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் இடம்பெற்று வரும் இந்தப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருந்தது.

அன்றையதினம் இரவே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை அவர்கள் போராட்டம் நடத்திய இடத்திலிருந்து விரட்டியடித்து, போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனையும் சட்டத்தரணி காண்டீபனையும் தனிமைப்படுத்தினர் பொலிஸார். மறுநாள் வியாழக்கிழமை காலை போராட்டக்காரர்கள் ஐந்து பேரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்து நிலமைகளை ஆராய்ந்த நீதிவான், விகாரையில் நடக்கும் வழிபாடுகளுக்கு இடைஞ்சல் விளைவிக்காமலும் வழிபாட்டுக்குச் செல்லும் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்காமலும் போராட்டத்தைத் தொடர்வதற்கு அனுமதி வழங்கினார். இதையடுத்து நேற்று முழு நாளும் தொடர்ந்த போராட்டம் இன்று பிற்பகல் 3 மணியுடன் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும், வெசாக் தினமான இன்று காலை போராட்டத்தையும் பொருட்படுத்தாமல் படையினர் மற்றும் பொலிஸார் விகாரையில் வெசாக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். பௌத்த கொடிகள் விகாரையைச் சுற்றிப் பறக்கவிடப்பட்டன. பிரித் ஒலிக்க விடப்பட்டது. பகலில் பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன.

இதையடுத்து 3 மணிக்குநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போராட்டம் தொடர்ந்தும் நடைபெறுகிறது. இன்றுடன் போராட்டம் முடிவுக்கு வரும் போன்ற நிலமைகள் தெரியவில்லை என்று களத்திலிருந்து எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர். போராட்டம் தொடரும் என்கிற உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் இந்தச் செய்தி அச்சுக்குச் செல்லும் வரையில் விடுக்கப்படவீல்லை என்றாலும் போராட்டம் தொடர்வதறகான சாத்தியங்களே தென்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலையில் மழைத் தூறலுக்கு மத்தியில் தற்காலிகமாகத் தறப்பாள் ஒன்றைக் கட்டிவிட்டு அதன் கீழிருந்து போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்கள் அதில் கலந்துகொண்டிருந்த டஸின் கணக்கானவர்கள். இன்றைய போராட்டத்திற்கு அணி திரண்டு வருமாறு தமிழ்த் தேசியப்பேரவை என்கிற அமைப்பு அழைப்பு விடுத்திருந்தபோதும் போராட்டத்தில் பெருமளவில் மக்கள் திரண்டிருக்கவில்லை. குறிப்பாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கூட அங்கு வருகை தரவில்லை. இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தையும் புறக்கணித்து, போராட்ட இடத்திற்கு வந்திருந்து ஆதரவு தந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்த கடும் விமர்சனங்களை அடுத்து, அவர்களின் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும்கூட இன்றைய போராட்டத்தில் கலந்துகொண்டிருக்கவில்லை.

"முப்பது வருட காலமாக நிலமிருந்தும் நிர்க்கதியாய் நிற்கிறோம், நீதி வேண்டும், நியாயத்தைத் தாருங்கள்", "சட்டவிரோத புத்த விகாரையை அகற்று", "எமது கடல் எமக்கு வேண்டும்", "வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்", "வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு", "தமிழர் தேசத்தில் புத்த விகாரை எதற்கு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியபடி போராட்டக்காரர்கள் அமைதியாக தமது இடத்திலிருந்து எதிர்பை வெளிப்படுத்தினர்.

# திருமலை மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்புக்கான பட்டறை





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டதில் உள்ள மாற்றுத்திறனாளிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை தொழிலில் இனைப்பது தொடர்பான பயிற்சி பட்டறை ஒன்று திருகோணமலை ஜே 7 வில்லா ஹோட்டலில் வியாழக்கிழமை இடம்பெற்றது

குறித்த நிகழ்வை சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் ஜெய்க்கா நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. மாற்றுத் திறனாளிகளில் இணங்காணப்பட்ட தொழில் செய்யக்கூடியவர்களை தொழிலுக்கு அமர்த்தி வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

குறித்த செயலமர்வுக்கு வளவாளராக ஜெய்க்கா நிறுவனத்தின் ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி கலந்துகொண்டார். கடந்த காலங்களில் மாற்றுத் திறனாளிகளின் தொழில் முன்னேற்ற அறிக்கை மற்றும் புதிதாக தொழிலில் இணைப்பது தொடர்பிலும் கலந்துரையாடல்களும் விடய ஆய்வு தொடர்பான அனுபவப் பகிர்வுகளும் இடம் பெற்றன.

இதில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப் பிரிவையும் உள்ளடக்கிய சமூக சேவை உத்தியோகத்தர்கள்,சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கைப் பணிப் பெண் குவைத்தில் மரணமானார்!

## விசாரணைகள் முன்னெடுப்பு என்கிறார் கீதா



குவைத்தில் பணி புரிந்து வந்த இலங்கைப்பெண்ஒருவர்சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் குவைத்துக்கான இலங்கை தூதுவர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக தூதுவருடன் தொலைபேசி ஊடாக உரையாடியதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏழு வருடங்களாக வெளிநாட்டில் பணிபுரிந்த பெண் தற்கொலை செய்திருக்க முடியாது என அந்த நபரின் குடும்பத்தினர் எழுப்பிய கேள்விகள், கவலையையும் இராஜாங்க அமைச்சர் முன்வைத்தார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என இராஜாங்க அமைச்சரிடம் தெரிவித்த இலங்கைத் தூதுவர், இது தொடர்பான விரிவான அறிக்கை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# அரசு கனவு காணக்கூடாது! திஸ்ஸ அத்தநாயக்க எடுத்துரைப்பு



ஆளுந்தரப்பினர், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

எனவே பொதுஜன பெரமுனவின் ஆதரவோடு நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொண்டதைப் போன்று ,தனையும் நிறைவேற்ற முடியும் என அரசாங்கம் கனவு காணக் கூடாதென ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் தெளிவுபடுத்தப்படும் என்று நீதி அமைச்சர் விஜேதாசஸ ராஜபக்ச தெரிவித்துள்ளமை தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடுப்பு சட்டம் பயங்கரவாத ஒழிப்பு செயற்பாடுகளுக்கும், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் போதுமானதாகும். எனினும் அதில் காணப்படுகின்ற சில விடயங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடைமுறையிலுள்ளபயங்கரவாதத் தடுப்பு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறும் பொய்களை நம்பி ஏமாறுவதற்கு நாம் தயாராக ,ல்லை.

காரணம் அதன் உள்ளடக்கங்கள் முற்று முழுதாக அரசாங்கத்துக்கு எதிரானவர்களை முடக்கும் வகையிலேயே காணப்படுகின்றன.

எனவே இந்த உத்தேச சட்ட மூலத்தை முழுமையாக எதிர்ப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். இந்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெறும் போது அதற்கு எதிராகவே வாக்களிப்போம்.

நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பொதுஜன பெரமுனவினரின் ஆதரவுடன் நிறைவேற்றிக் கொண்டதைப் போன்று ,ந்த சட்ட மூலத்தையும் நிறைவேற்ற முடியுமென அரசாங்கம் எண்ணக் கூடும்.

ஆனால் அரசாங்கத்துக்குள்ளும் ,தனை எதிர்ப்பவர்கள் உள்ளனர். தற்போது நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தவிர , எதிர்தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் உள்ளன. எமது அரசியல் கொள்கைகள் வேறுபட்டவையாகக் காணப்பட்டாலும் , நாட்டுக்கும், ஜனநாயகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்வாறான விடயங்களை நாம் அனைவரும் இணைந்து எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். - என்றார்.

# திருமலையில் முதலாவது பசுமை வகுப்பறை திறப்பு





(ஹஸ்பர்)

திருகோணமலையில் முதலாவது பசுமை வகுப்பறை புனித மரியாள் கல்லூரியில் ஒழுங்கமைக்கப்பட்டு வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது. இத் திட்டம் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஊடாக தேவ் - லலிதா மகாதேவன் (அவுஸ்திரேலியா) நிதி பங்களிப்போடு ரிங்கோ எய்ட் நிறுவனத்தால் செற்படுத்தப்பட்டது.

பசுமை வகுப்பறை என்பது நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக வடிவமைக்கப்பட்ட கற்றல் சூழலாகும்.

இது சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு இடமாகும், மேலும் இது சுற்றுச்சூழலை மதிக்கும் வகையில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும். முதல் கட்டமாக புனித மரியாள் கல்லூரியின் 5 பி வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டது.

ரிங்கோ எய்ட் நிகழ்ச்சி முகாமையாளர் சங்கரலிங்கம் நவநீதனால், பசுமை வகுப்பறைக்கான நினைவுச்சின்னம் வலயக் கல்விப் பணிப்பாளர், மற்றும் விருந்தினர்கள் ஊடாக அதிபர், வகுப்பு ஆசிரியர்களிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றது.அதில்திருகோணமலைநகரத்தில் பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பாகவும், பசுமை வளாகங்கள் அமைப்பது தொடர்பாகவும், பாடசாலை மாணவர்களை கொண்டு சிறந்த செயல்திட்டங்களை எதிர்வரும் காலங்களில் செயல்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்வி பணிப்பாளர் டி.ரவி கலந்துகொண்டார்.

# கஜூகமவில் இரண்டு பஸ்கள் மோதி விபத்து: பலர் காயம் ; போக்குவரத்துக்குத் தடை!







கண்டி – கொழும்பு வீதியில் கஜுகம பகுதியில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது. இதன காரணமாக கொழும்பு – கண்டி வீதியில் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொறுப்புணர்ந்து நடப்பாரா அமைச்சர்?

ஒரு நாட்டில் ஆளும் தரப்பாக அன்றி எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் ஆளும் தரப்புச் செய்யும் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை என்பது அரசியல் பாலபாடம். அதேபோன்றே ஆளும் தரப்பில் உள்ளவர்கள், அதுவும் பல கட்சிகளின் கூட்டணி ஆளும் தரப்பில் உள்ளவர்கள் ஆளும் தரப்பு அல்லது அரச தரப்புச் செய்கின்றது என்பதற்காகவே அதனை ஆதரிக்கவேண்டும் என்பதில்லை.

வடக்கைச் சேர்ந்தவரும் நீண்ட காலமாக ஆளும் தரப்போடு சேர்ந்திருந்து அரசியல் செய்பவருமான மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களைப் பார்க்கும்போது இதைத்தான் கூறவேண்டி இருக்கிறது.

தையிட்டி விகாரை பற்றிக் அவரிடம் கேட்கப்பட்டதற்கு, படையினர் தங்கியுள்ள அவர்களின் வழிபாட்டுக்காக விகாரை அமைக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார். தையிட்டி பற்றி முழுமையாக அறியாமல் கருத்துச் சொல்ல முடியாது என்று அவர் தெரிவித்திருந்தார். அதேநேரம் அந்த விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கின்றது என்று தெல்லிப்பழை பிரதேச செயலர் தெரிவித்திருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

அவர் ஒரு மூத்த அமைச்சர், நீண்ட காலமாக ஆளும் தரப்புகளுடன் சேர்ந்திருந்து அமைச்சுப் பதவியீல் இருப்பவர். முஸ்லிம் கட்சிகளும் மலையகத் தமிழர்களின் கட்சிகளும் எப்படி எப்போதும் ஆளும் தரப்புடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறுகின்றனவோ அதேபோன்று தொடர்ந்து அமைச்சுப் பதவியைப் பெற்று வருபவர். அமைச்சரவையிலும் மிக மூத்தவர்களில் ஒருவர். அந்தத் தகமைகளுடன் ஆளும் தரப்பின் தவறுகளை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டி தமது மக்களின் உரிமைகளுக்காகப் அமைச்சரவைக்குள்ளும் ஆளும் தரப்புக்குள்ளும் போராடவேண்டியவர்.

அப்படிப்பட்டவர், படையினர் ஆளும் தரப்புக்குரியவர்கள் என்கிற வகையில் கருத்துத் தெரிவித்திருப்பது சரியானது அல்ல. எல்லோருக்கும் வழிபாட்டுரிமை உள்ளது. அந்த வகையில் படையினருக்கும் வழிபாட்டுரிமை உள்ளது. அவர்கள் புத்தரை வைத்து வணங்குவதற்கு இங்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. எல்லாப் படை முகாம்களிலும் எல்லா காவல்துறை நிலையங்களிலும் புத்தரை வைத்து வழிபடுகின்றார்கள். மிகச் சிறியதாகவோ நடுத்தரமாகவோ அத்தகைய வழிபாட்டிடங்களை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அவற்றுக்கு தமிழ் மக்கள் யாரும் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை.

இன்று புத்த பூர்ணிமா தினம். வடக்கு கிழக்கில் உள்ள எல்லாப் படைமுகாம்களிலும் காவல் நிலையங்களிலும் அது தொடர்பாகப் பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டு, வைகாசி விசாக நாள் கொண்டாடப்படுகின்றது. சில இடங்களில் பாற்சேறு மற்றும் குளிர்பானங்கள் வழங்குகிறார்கள். தமிழர்கள் இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் படையினர் இந்த பௌர்ணமி நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு அவர்களின் உபசரிப்பைக்கூட ஏற்றுக்கொள்கிறார்கள். அதை ஏன் இங்கு வந்து கொண்டாடுகிறீர்கள் என்று யாரும் கேட்பதில்லை.

அதேபோன்று யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் உள்ள விகாரைக்கோ, நயினாதீவில் அமைந்துள்ள விகாரைக்கோ தமிழர்கள் யாரும் ஒருபோதும் எதிர்ப்புக் காட்டியது இல்லை. ஏனெனில் அவை அங்கே ஆண்டாண்டு காலமாக இருந்திருக்கின்றன என்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் எதிர்ப்பதெல்லாம், பௌத்தத்தின் பேரால், புத்தரின் பேரால் இடம்பெறும் ஆக்கிரமிப்புக்களைத்தான். அத்தகைய ஆக்கிரமிப்புக்களைக் கண்டுகொள்ளாமல் அனுமதித்து அனுசரித்து அதன் மூலம் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை தமிழர்கள் மீது நிறுவ முயலும் அரச பொறிமுறையைத்தான். தையிட்டியில் அமைந்துள்ள விகாரை சட்டவிரோதமானது என்று அறுதியிட்டுக்கூற அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலரைத் தவிர வேறு அரச அதிகாரி ஒருவர் பொருத்தமானவராக இருக்கவே மாட்டார். அப்படியிருக்கும்போது, அவரே தையிட்டி விகாரை சட்டவிரோதமானது என்று சொன்ன பிறகு, அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிகூறி அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதுதானே அமைச்சராக ஒருவரின் கடமை, பொறுப்பு.

அதைவிடுத்துதனது எதிர்த்தரப்பினர் போராட்டம் நடத்துகின்றார்கள் என்பதற்காக சட்டவிரோத நடவடிக்கை ஒன்றை ஆளும் தரப்பினைப் பாதுகாக்கும் அரச இயந்திரங்களான படையினரும் காவல்துறையினரும் ஆதரிக்கிறார்கள் என்பதற்காக, படையினர் இருக்கும் இடங்களில் எல்லாம் அவர்களின் வழிபாட்டுக்காக விகாரை அமைக்க முடியும் என்று கூறக்கூடாது. அது ஒரு பொறுப்புள்ள மூத்த அமைச்சருக்கு அழகல்ல. அனுபவ முதிர்ச்சிக்குரியதுமல்ல. படையினர் வழிபாட்டிடங்களைத் தமது முகாம்களுக்குள் கொண்டிருக்கலாம். விகாரைகளை அல்ல. விகாரை என்பது நிரந்தரக் கட்டுமானம். அதை எழுப்புவதற்கு உரிய அனுமதிகள் பெறப்படவேண்டும், சட்டபூர்வ தகுதிநிலை இருக்கவேண்டும் என்பது அரசே வகுத்து வைத்துள்ள விதிகள். படையினர் என்பதற்காக அவற்றையெல்லாம் மீறிச் செயற்படமுடியும் என்று ஒரு அமைச்சரே நியாயப்படுத்துவது ஏற்றுக்கொள்ளவே முடியாதது.

இனியாவது அமைச்சர் இதுபோன்ற விடயங்களில் ஒரு மூத்த அனுபவமுள்ள அமைச்சராக நடந்துகொள்ளவேண்டும். குறைந்துபட்சம் சட்டவிரோத நடவடிக்கைகளை நியாப்படுத்தும் வகையிலான கருத்துக்களையாவது தெரிவிக்காமல் இருக்கவேண்டும்.

# பெருந்தோட்ட மக்களுக்கு 1000 ரூபா அடிப்படை சம்பளம்பெற ஒத்துழைப்பு!

## காவிந்த பகிரங்கம்



பெருந்தோட்ட மக்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக 1000 ரூபாவை வழங்கு-வதற்கான சகல முயற்சிகளுக்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மே தினத்தன்று பதுளையில் இடம்பெற்ற கூட்டத்தில் நானும் கலந்து கொண்டிருந்தேன். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது, 'மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி மலையகத்திலும், தலைநகரிலும் இரு மே தினக் கூட்டங்களை நடத்தியதைப் போன்று இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியும் இரு மே தினக் கூட்டங்களை நடத்த வேண்டும். – என்ற கோரிக்கையை வடிவேல் சுரேஷ் முன்வைத்தார்.

அதற்கமைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினுடைய அனுமதியுடன் சமிந்த விஜேசிறி, வேலுகுமார் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் பதுளையில் எமது மே தினக் கூட்டம் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், இந்த அரசாங்கம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக 1000 ரூபாவை வழங்கு-வதற்கு இதுவரையிலும் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

பேராதனை பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள கணிப்பீட்டுக் கமைய ஒரு சாதாரண மனிதன் இலங்கையில் தற்போதுள்ள நிலைமையில் தனது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதற்கு நாளொன்றுக்கு 3250 ரூபாவை சம்பளமாகப் பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இதனை வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதே போன்று இதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பொன்றில் எதிர்க்கட்சி தலைவருக்கு பங்குபற்ற முடியாத நிலைமை ஏற்பட்டமையால், பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர் நிச்சயம் அம்மக்களை சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார். அதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் இணக்கம் தெரிவித்துள்ளார். எனவே இந்த விவகாரத்தில் எந்தவொரு சிக்கலும் இல்லை.

இதற்காக வடிவேல் சுரேஷ் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாகக் கூறவில்லை. அவர் அவ்வாறு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. எவ்வாறிருப்பினும் பெருந்தோட்ட மக்களின் நாளாந்த அடிப்படை சம்பளமாக 1000 ரூபாவை வழங்குவதற்கான சகல முயற்சிகளுக்கும் நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். – என்றார்.

# கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படும் செய்தியில் உண்மையில்லை!

## தொற்றுநோய் ஆய்வு பிரிவின் பிரதானி விளக்கம்

நாட்டில் கொவிட் தொற்று அதிகரித்து வருவதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் அளவுக்கு அதில் உண்மையில்லை. தொற்றாளர்கள் இனம் காணப்பட்டாலும் அது எச்சரிக்கையான நிலை எனத் தெரிவிக்க முடியாது.

என்றாலும் கொவிட் தொற்று இன்னும் முழுமையாக உலகில் இருந்து நீங்கவில்லை என்பதால் அதன் பாதிப்பு தொடர்ந்து இருந்து வருகிறது என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வு பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் தொற்று 2019 இல் உலகளாவிய ரீதியில் பரவிய தொற்றுநோயாகும். இது இன்னும் முற்றாக உலகில் இருந்து இல்லாமல்போகவில்லை. என்றாலும் நாடு என்றவகையில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தோம். 2021 ஆரம்பத்தில் எமது நாட்டில் கொவிட் தொற்றாளர்கள் நாளாந்தம் 6 ஆயிரம் பேர்வரை தொற்றுக்குள்ளாகி வந்தனர்.

என்றாலும் குறித்த வருட இறுதியாகும்போது அதனை 5 பேர் வரை குறைத்துக் கொள்ள முடியுமாகியது. 2022 பெப்ரவரியாகும் நாளாந்தம் 20 பேர் வரையே தொற்றுக்குள்ளாகி வந்தனர்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை முறையாக மேற்கொண்டதாலே அதனை எமக்கு கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமாகியது.

அத்துடன் நாட்டின் மொத்த சனத்தொகையில் 70 வீதமானவர்கள் கொவிட் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக்கொண்டுள்ளனர்.

அதனால் கொவிட் மரணங்களையும் தற்போது எமக்கு குறைக்க முடியுமாகி இருந்தது. தற்போதும் வாரத்துக்கு இரண்டு அல்லது 3 கொவிட் மரணங்கள் இடம்பெறும் நிலையே இருந்து வருகிறது. உலகளாவிய ரீதியில் பார்க்கும்போதும் கொவிட் எச்சரிக்கை இன்னும் முற்றாக நீங்கவில்லை.

என்றாலும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோன்று கொவிட் தொற்றாளர்கள் இனம் காண்பது முற்றாக நீங்கவில்லை. எமது நாட்டிலும் ஒருசில மாதங்களில் காலநிலை மாற்றத்துக்கு ஏற்பட தொற்றாளர்கள் இனம் காணும் எண்ணிக்கை கூடும் குறையும் வகையில் இருக்கிறது. கடந்த இரண்டு வாரங்களில் 6,7 பேர்வரை தொற்றாளர்கள் இனம் காணப்பட்டிருந்தனர்.

என்றாலும் இது ஆபத்தான நிலை எனத் தெரிவிக்க முடியாது. இருந்தபோதும் தொடர்ந்தும் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி வரவேண்டும். குறிப்பாக இந்த காலப்பகுதியில் இருமல், தடிமல் நோய் அதிகரித்து காணப்படுகிறது.

அதற்காக கொவிட் எனத் தீர்மானிக்க முடியாது. இருந்தபோது சமூக பொறுப்பு என்றவகையில் இவ்வாறான நோயுடையவர்கள் முகக்கவசம் அணிந்துகொள்ளல், சன நடமாட்டம் அதிகம் இருக்கும் இடங்களுக்கு செல்வதை தவிர்ந்துகொள்ளவேண்டும் என்றே மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று கொவிட் மரணம் கடந்த இரண்டு வாரங்களில் அதிகரித்திருப்பதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு எதுவும் இல்லை. சாதாரணமாக வேறு நோய்களுக்குள்ளாகி அவர்களுக்கு கொவிட் நிலையும் ஏற்பட்டதன் காரணமாக ஏற்பட்ட மரணங்களே இடம்பெற்றிருக்கின்றன.

அத்துடன் கொவிட் தொற்றாளர்கள் என வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நிலையும் இதுவரை அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்படவில்லை. அதனால் இது தொடர்பாக வீணாக மக்கள் அச்சப்படத்தேவையில்லை. என்றாலும் மக்கள் எப்போதும் சுகாதார வழிகாட்டில்களை பேணிவந்தால் இவ்வாறான நோய் தொற்றுக்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும். – என்றார்.

# மத நல்லிணக்கத்தைப் போற்றுபவர்களே பௌத்தத்தை உண்மையாக பின்பற்றுவோர்!

## வெசாக் தின வாழ்த்தில் சஜித்



மனித இனம் முழுவதற்கும் இணக்கமான நடைமுறையை வழிநடத்தும் தூய தர்மத்தால் ஈர்க்கப்பட்டு மனித நேயத்துடன் மத நல்லிணக்கத்தைப் போற்றும் ஒவ்வொருவரும் இருந்தால் அவர்கள் பௌத்தத்தை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் ஆவர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு -

இலங்கையர்களுக்கும் உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் வெசாக் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் மற்றும் இறப்பு ஆகியவை பௌத்தத்தின் மிகப்பெரிய பண்டிகையாகும். இது உலகின் பௌத்த மக்களால் மிகுந்த நம்பிக்கையுடன் கொண்டாடப்படுகிறது.

இவ்வுலகில் நிலைநாட்டப்பட்ட தோற்கடிக்க முடியாத தத்துவத்தை உலகுக்கு அருளிய-வர். பிரபஞ்சத்தில் உள்ள பூரண உண்மையைக் கண்டு புத்தபிரான் உபதேசித்த ஸ்ரீசதர்மம் நிரந்தரமானது என்பதை நாளுக்கு நாள் நிரூபித்து வருகிறது.

பௌத்தசகாப்தம் எப்பொழுதும் பௌதிக வாழ்க்கையை போஷித்து அதன் அடிப்படையில் ஆழ்நிலை வாழ்க்கையை வளர்க்க நடைமு-றைச் செயல்களின் ஒழுங்கைக் காட்டியுள்ளது. மேலும் அந்தக் கண்ணோட்டத்தில் பௌத்தம் மிகவும் அடிப்படை மற்றும் மேம்பட்ட வாழ்க்கை முறையாகும். தர்மம் என்றால் என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த புத்தர், 'யோ தம்மன் பஸ்ஸதி, ஸோ மன் பஸ்ஸதி யோ மன் பஸ்ஸதி ஸோ தம்மன் பஸ்ஸதி ' எவன் தர்மத்தைப் பார்க்கிறானோ அவன் என்னைப் பார்க்கிறான். எவன் என்னைப் பார்க்கிறானோ அவன் தர்மத்தை பார்க்கிறான்.

புத்தபெருமானின் தர்மம் உலக உயிரினங்கள் அனைத்துக்கும் தனித்துவம் மிக்க கருணை நிரம்பிய தர்மமாகும். மனித இனம் முழுவதற்கும் இணக்கமான நடைமுறையை வழிநடத்தும் தூய தர்மத்தால் ஈர்க்கப்பட்டு மனித நேயத்துடன் மத நல்லிணக்கத்தைப் போற்றும் ஒவ்வொருவரும் இருந்தால், அவர்கள் பௌத்தத்தை உண்மையாக பின்பற்றுபவர்கள் ஆவர்.

எனவே, உலகின் மிகப் பெரிய தர்மத்தில் தஞ்சம் புகுந்த உன்னத குடிமக்களாக, உலக உயிரினங்கள் மீது கருணை, பாசம் மற்றும் அன்புடன் மகத்தான வெசாக் நாள்களைக் கொண்டாடுவோம். - என்றுள்ளது.